தொகுதி- ருஎ :: பகுதி-கக, கஉ —Vol. 57 :: No. 11, 12

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1993
பிலவ — மாசி, பங்குனி
FEBRUARY, MARCH—1962

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 17—5—62)

உ

## உள்ளுறை


1 அறவியல் (பண்டித மீ. கந்தசாமிப் பிள்ளை) 323
2 எழுத்தச்சன் 325
புலவர் எஸ். ஜி. சுப்பிரமணிய பிள்ளை, திருவனந்தபுரம்
3 அறிந்துமறிந்திலம் (கா. பாக்கியரத்தினம், கொழும்பு) 331
4 நான் வியக்கும் பாவலர் (நாவரசன்) 334
5 இளவேனிற் பதிகம் (புலவர் ந. செகதீசன்) 339
6 துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் 342
வித்துவான் ஆ. சிவலிங்கனார் அவர்கள்
விரிவுரையாளர், தமிழ்க் கல்லூரி, மயிலம்
7 தமிழர் வரலாற்றில் தருக்காக்குடி 350
மணவை. கா. மாரன், ஆசிரியர்
8 முயல்கள் வர்ணமுட்டைகள் போட்ட நாளிலே
ஜெர்மனியில் பழைய ஈஸ்டர் வழக்கங்கள் 356
(திருமதி சசிகலா திரிவேதி)
9 பாட்டில்களில் கப்பல்கள் (திருமதி சசிகலா திரிவேதி) 359
10 வள்ளுவர் வழங்கும் மொழி நூல் 362
வித்துவான் வி. ப. கா. சுந்தரம் எம். ஏ.,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.
11 பொருளியல் (பண்டித. முத்துசாமிப்புலவர், 376
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மரியன்னை உயர்நிலைப்பள்ளி, மதுரை.
12 அறவியல் (புலவர்மணி, வித்துவான் இ.கி. சுந்தரமூர்த்தி) 379
தலைமைத் தமிழாசிரியர்,
தியாகராசர் நன்முறை உயர்நிலைப் பள்ளி, மதுரை.
13 டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் 384
தமிழ்ச் சங்கத்திற்கு அளித்த நூல்கள்


---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு


1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L. C.

2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph D. சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி. ௫௭ Vol. 57 | திருவள்ளுவர் ஆண்டு 1993 பிலவ — மாசி-பங்குனி 1962—February-March | பகுதி. ௧௧,௧௨ No. 11, 12

## அறவியல்.

[பண்டித மீ. கந்தசாமிப் பிள்ளை]

1 நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகு நெஞ்ச மாகச்
சீராரும் புலவர்பலர் சொலுமதுரை மாநகரிற் சிறப்பத்தோன்றிப்
பேராரும் அறியும்வணம் திகழ்ந்திடுவள் ளுவர்கழகம் பிறங்க நாளும்
ஆராருஞ் செய்தறியாப் பணிபலசெய் வீர்செவிகள் ஆரக்கேண்மின்.

2 நுந்தமக்காங் கிலமுறையில் நல்லிரவு மனமகிழ நுவன்று நல்ல
செந்தமிழ்வல் லவர்முன்னு ளாராய்ந்த அறங்குறித்துச் செப்பி வந்த
தந்தமது கவிகள்சொலக் கவிவாணர் பலர்குழுமிச் சார நாப்பண்
எந்தமது கருத்துரைப்ப நும்முன்னர்க் கவியரங்க மேறு கின்றேம்.

3 வள்ளுவரில் லறத்தோடு துறவறமென் றங்காளில் வகுத்த தான
தெள்ளுபுகழ்க் கன்னலினை யறிவெனுமோர் பொறிப்படுத்துத் தெளிந்த சாறு
கொள்ளவடித் தமைத்தவொரு கட்டியெனச் சிலர்கவிகள் கூற வுள்ளார்
கள்ளமில்லா யாமதனால் அறமாகாச் செயல்கள்சில கழற லானேம்.

4 இன்னதற மென்றாலு மின்னதற மில்லையென வியம்பி னாலும்
அன்னவிரண் டாலுமொரு கருத்தாதல் யாமெல்லா மறிவ தாலே
சொன்னவறப் பொருள்குறித்துப் பிறரெல்லாம் கவிசொலயாம் சொல்லேமாகி
நன்னரற மாகாத சிலகூறக் கருதிடுதல் நன்றா காதோ?

5 கண்ணகன்மா ஞாலமதிற் றும்பிறத்தற் கிடமாகிக் கணக்கில் லாத
வண்ணவுரை குடிநீரோ டுப்பிவையும் பலகாலம் வழங்கி மேலும்
உண்ணவுண வீந்துதம பிணமேற்குந் தமிழகத்தை யுறவாக் கொண்டிங்
கெண்ணலிலா திருப்பாருக் கஃதறமோ நடுவாக வியம்பு வீரே.

6 பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரமே போல
வூர்க்குளுறு விளம்பரத்தோ டரசினர்தம் மறிவிப்பு மூறு மிக்க
தீர்க்குமுறை யில்லாத பலவகையாம் பிழைமலிந்து திகழு மாலிஃ
தார்க்குமறமாகுமோ வெந்நாட்டுங் கண்டதுண்டோ அறைகு வீரே.

7 பிறந்தநாண் முதலாக இறக்கும்வரை தமிழ்மொழியே பேசி வந்தும்
மறந்திடா வகைபயின்றம் மொழிதனையே பயிற்றுவதால் வருவாய் பெற்றும்
திறந்தவா தம்மொழியி லன்புகொளா ததன்மேலுஞ் செழித்தல் கண்டு
புறந்திய வுள்வெதும்ப லறமாமோ நடுவாகப் புகலு வீரே.

8 ஆங்கிலமே முதலான மொழிவகையிற் செய்திதமை யழகி னல்கும்
பாங்குபெறு தாள்களிலே மொழிக்கலப்புக் கண்டறியேம் பண்புமிக்க
வோங்குபுகழ்த் தமிழ்த்தாளில் கலப்பொழியப் பிறகாணேம் உற்று நோக்கி
னீங்கிதுமற் றறமாமோ வுளத்தெண்ணி நடுவாக இயம்பு வீரே.

9 தாய்மொழியிற் பேசுவதால் எழுதுவதாற் பெரும்புகழே சாரப் பெற்று
வாய்மொழியில் வல்லவராய்ப் பிறநாட்டில் தமிழ்மொழியை மாணு தென்று
போய்மொழிவா ரிந்நாட்டிற் பலருண்டு மற்றிவர்தம் போக்கு மிக்க
சேய்மொழியிற் சிறுமொழியா மீதறமோ நடுவாகச் செப்பு வீரே.

10 கோவில்களில் தமிழ்மொழியில் வழிபாடு வேண்டுமெனக் கூறி ஞாலும்
தாவில்புகழ்த் திருமணத்தில் தமிழிசையே வேண்டுமெனச் சாற்றி ஞாலும்
நாவியலா னெதிர்ப்பவருண் டறமாகா இவையென்ன நவின்று சீர்சேர்
பாவிலமை கவியரங்கத் தெம்வணக்கம் நுந்தமக்குப் பகர்கின் றேமே.

---

மதுரைத் திருவள்ளுவர் கழகத்துச் சார்பில் நடைபெற்ற கவி யரங்கில் அரங்கேறியவை.

# எழுத்தச்சன்

(புலவர் எஸ். ஜி. சுப்பிரமணிய பிள்ளை, திருவனந்தபுரம்)

மலையாள மொழியைச் செம்மைப்படுத்தி அதற்குப் புதிய வடிவம் கொடுத்தவர் எழுத்தச்சனுவார். அவரது காலத்திற்கு முன்தோன்றிய இலக்கியங்களைப் "பாட்டு" "மணிப்பிரவாளம்" என இரண்டாகப் பகுப்பர் அம்மொழி வல்லார். "பாட்டென"ப்படுவது தமிழ் விருத்தங்களுக் கிணங்க வடசொல் மிகக் கலவாது இயற்றப்பட்டதாகும். இதில் வடமொழித் தற்பவங்கள் திரித்து எழுதப்பட்டுள் ளன. "ராம சரிதம்" முதலியன இவ்வினத்தைச் சாரும். "மணிப்பிரவாள"மாவது வடசொற்களையும் வடமொழி வேற்றுமை முடிபுகளையும் பெரிதும் கலந்து வடமொழி விருத்த இலக்கணப்படி எழுதப்பட்டதாகும். இதில் வட மொழித் தற்பவங்களுக்கு ஆரிய எழுத்துக்களையே பயன் படுத்தியுள்ளனர். "உண்ணு நீலீஸந்தேசம்" முதலியன இதற்கு உதாரணம், இவ்விரு முறைகளிலிருந்தும் ஏற்பன கொண்டு எழுத்தச்சன் கையாண்ட புதிய நடை, பிற்காலப் புலவர்களால் பெரிதும் பின்பற்றப்பட்டது. இதனைக் கூற வந்த கேரளபாணினீய ஆசிரியர் "........இடையே தடைப் பட்டு இரண்டு திசைகளை நோக்கிப் பாய்ந்தொழுகிய கேரள கவிதா ஸரஸ்வதியை மீண்டும் ஒருமுகப்படுத்தித் தடையின்றி ஒழுகச் செய்த பெருமை துஞ்சத்து ராமானு ஜன் எழுத்தச்சனைச் சாரும்" என்கிறார்.

எழுத்தச்சன் இயற்றிய "அத்யாத்ம ராமாயணம் கிளிப் பாட்டு" மலையாள மொழியில் தலைசிறந்த இலக்கியமாகவும் வீடுகள்தோறும் பத்தியோடு நித்தம் பாராயணம் செய்யப் படும்புனித நூலாகவும் திகழ்கிறது. "ஹரிநாம கீர்த்தனம்" "மகாபாரதம்" என்பன அவர் இயற்றிய பிறநூல்களாகும். இருபத்துநாலு விருத்தம், கைவல்ய நவனீதம், சிவபுராணம், தேவி மாகாத்மியம் முதலியனவும் அவர் இயற்றியனவா

கவே கருதப்படுகின்றன. இவை குறித்து ஆராய்ச்சியாளர் களிடையே மாறுபாடான கருத்துக்கள் நிலவிவருகின்றன.

பழங்காலத் தமிழ்ப் புலவர்களது வரலாற்றைப் போலவே எழுத்தச்சனது வரலாறும் முழுதும் உணரப்பட வில்லை. அவருடைய பெயர்கூட இன்னும் தருக்க விஷய மாகவே இருந்துவருகிறது, ராமன் என்பர் சிலர்; ராமானு ஜன் என்பர் சிலர்; சங்கரன் என்பர் சிலர்; கருணாகரன் என் பர் சிலர்—இங்ஙனம் பலவாறாகக் கூறித் தத்தம் கூற்றிற்கு ஆதாரங்களும் காட்டுவர். "ராமானுஜன் எழுத்தச்சன்" என்றே அவர் பெரும்பாலும் அறியப்படுகிறார்.

அவர் வாழ்ந்த காலத்தைக் குறித்தும் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. கொல்லம் ஆண்டு 700—ற்குச் சற்று முன்போ பின்போ அவர் வாழ்ந்திருந்தார் என்றுகொள்வது பொருந்தும்.

எழுத்தச்சன் பிறந்த இடம் மட்டுமே சந்தேகமற இன்று அறியப்படுகிறது. பொன்னானித் தாலூகாவில் திருக்கண்டியூர் சிவன் கோவிலிற்கு அருகிலுள்ள ''துஞ்சன் பறம்பில்'' எழுத்தச்சன் பிறந்தார். அவர் பிறந்து வளர்ந்த அவ்விடம் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. குழந்தை களுக்கு வித்தியாரம்பம் செய்யத் துஞ்சன்பறம்பிலிருந்து மண் எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றும் உண்டு. அம் மண்ணின் பெருமையைக் கூறவந்த மகாகவி வள்ளத்தோள்

''விசுத்த மாகு மவிடத்தே மண்ணு
வித்யக் கிருஷிக் கின்னு மதீவ முக்யம்''

(அவ்விடத்திலுள்ள பரிசுத்தமான மண் கல்விப் பயி ருக்கு இன்றும் மிகச் சிறந்ததாகும்)—என்று இவ்வழக் கத்தை நயம்பட எடுத்துரைக்கிறார். 'துஞ்சன்பறம்பி'ல்

பிறந்தவராதலால் எழுத்தச்சனைத் "துஞ்சத்தெழுத்தச்சன்" எனவும், "துஞ்சத்தாசாரியன்" எனவும் அழைப்பர்.

எழுத்தச்சனைப் புரிந்துகொள்ள அவரைக் குறித்து நாட்டில் வழங்கிவரும் பழங்கதைகளை நாடுவதைவிட அவருடைய இலக்கியங்களை 'நாடுதல் சாலப்பொருந்தும்.

அத்யாத்ம ராமாயணத்தில் ஆசிரிய வணக்கம் கூறுமிடத்து:—

"அக்ரஜன் மம ஸதாம் விதுஷாமக்ரேஸரன்
மல்குரு நாதனனே காந்தேவாஸிகளோடும்
உள்க்குருந்நில் வாழ்க ராமனுமாசாரியனும்
முக்யன்மாராய குருபூதன்மார் மற்றுள்ளோரும்"

என்கிறார். இதிலிருந்து அவருக்குக் கல்வியறிவித்த ஆசிரியர் பலரெனவும், அவருள் தமையனாராகிய ராமாசாரியரும் ஒருவரெனவும் விளங்குகிறது. ஆசிரியனாகிய தமையனாரை "விதுஷாமக்ரேஸரன்" (புலவருள் தலையாயவர்) என்று சிறப்பித்துக் கூறுகிறார். ஹரிநாமகீர்த்தனத்தில் "ஸ்ரீ நீலகண்டகுரு" என்னும் ஆசிரியருக்கு வணக்கம் செலுத்துகிறார்.

"அத்யாத்ம ராமாயணம் கிளிப்பாட்டு" வடமொழியிலுள்ள அத்யாத்ம ராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும். ராம கதையை ஒரு கிளி கூறுவதுபோலத் தமது நூலை அமைத்துள்ளார். "ஸ்ரீ ராமநாமம் பாடிவந்த பைங்கிளிப் பெண்ணே! ஸ்ரீ ராம சரிதம் சொல்லிடு நீ மடியாதே' —என்று பைங்கிளியைக் கவி வேண்ட, அது கூறுகிறது. கைலயங்கிரியில் உமாதேவி "ஸ்ரீ ராம தத்துவத்தை உபதேசம் செய்ய வேண்டு"மென்று சிவபிரானைப் பணிய அவர் கூறத் தொடங்கினர் என்று கதை ஆரம்பமாகிறது.

எழுத்தச்சனது இலக்கியங்களனைத்தும் பத்திச் சுவை மிகுந்தனவாக மிளிர்கின்றன. பத்தி நெறியும் ஆன்ம ஒழுக்கமும் மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர் இலக்கியங்களைப் படைத்துள்ளார் என்பது விளங்கும். அதன் பொருட்டே வான்மீகி ராமாயணத்தைத் தேர்ந்தெடுக்காது வடமொழியிலிருந்து அத்யாத்ம ராமாயணத்தை முதனூலாகத் தேர்ந்தெடுத்தார் போலும்.

எழுத்தச்சன் இராமனிடம் அளவு கடந்த பத்தியுடையவர். எனவே இராமனது பெயரைக் குறிப்பிட வேண்டிய இடங்களில் அவர் தம்மை மறந்து துதிப்பதைக்காணலாம். சீதையோடும் இலக்குவனோடும் இராமன் வான்மீகி முனிவரது ஆசிரமத்திற்குச் செல்கிறான். முனிவரைக் கண்டு வணங்கி நின்ற இராமனை அவர் மார்புறத் தழுவினர் என்று கூறவந்த கவிஞர் இராமனுக்கு எத்தனை அடைமொழிகள் கொடுக்கிறார் பாருங்கள்:—

"ராமம் ராமாவரம் வீரம் மனோகரம்
கோமளம் சியாமளம் காமதம் மோகனம்
கந்தர்ப்ப சுந்தர மிந்தீவ ரேக்ஷணம்
இந்த்ராதி வ்ருந்தார கைரபீ வந்திதம்
பாண தூணீர தனுர்த்தரம் விஷ்டபத்
ராண நிபுணம் ஜடாமகு டோஜ்வலம்
ஜானகீ லக்ஷ்மணோ பேதம் ரகூத்தமம்
மானவேந்த்ரம் கண்டு வான்மீகியும் ததா
ஸந்தோஷ பாஷ்பாகு லாக்ஷனாய் ராகவன்
தன் திரு மேனி காடம் புணர்ந்நீடினான்."

இறைவனை அடைதற்குப் பத்தியே சிறந்த வழியென்பது அவர் கொள்கை. பத்தியில்லாதவர்களுக்கு ஞானம், வைராக்கியம் முதலியனவும் கிட்டா என்கிறார்.

"பக்திஹீனன்மார்க்கு நூருயிரம் ஜன்மம்கோண்டும்
ஸித்திக்கயில்ல தத்வஞானவும் வைராக்யவும்"

வேதாந்த தத்துவங்களைக் குறித்துப் பேசும் இடங்களில், அவரது திறனும் விஷயத் தெளிவும் நன்கு புலனுகின்றன. இராமாயணத்தில் வருகின்றஇ லட்சுமணேபதேசம், அகத்தியத் துதி, ஜடாயுத்துதி, தாரோபதேசம் போன்ற இடங்கள் இம்முறையிற் சிறந்தனவாகும்,

அறிவுரைகளையும் அவர் ஆங்காங்கே சுவைபடக் கூறிச் செல்கின்ருர்,

1) சிறிய பொழுதை அலட்சியம் செய்பவர்க்குக் கல்வியில்லை; சிறிய பொருளை அலட்சியம் செய்பவர்க்குப் பொருளும் இல்லை.

"கிம்க்ஷணன் மார்க்கு வித்யயுண்டாக யில்லல்லோ
கிங்கணன் மாராயுள்ளோர்க் கர்த்தவு முண்டாய்வரா"

2) செய்நன்றி கொன்றவன் இருந்தும் இறந்தவனேடொப்பான்.

"ப்ரத்யுபகாரம் மறக்குன்ன பூருஷன்
சத்ததிஞேக்குமே ஜீவிச்சிரிக்கிலும்"

இதுபோன்ற நீதிவாக்கியங்கள் அவரது இலக்கியங்களிலே மிகப் பல.

ஹரிநாம கீர்த்தனத்தை எழுத்தச்சன் தமது புதல்வியின் பொருட்டு இயற்றினர் என்று கூறுவர். எளிய நடையும் இனிய சந்தமும் இந்நூலின் சிறப்பியல்புகள், அதிகாலையிலும் அந்திமாலையிலும் இதனை வீடுகள் தோறும் இராகத்தோடு படிக்கும் வழக்கம் இன்றும் உண்டு. கற்ருேரும் மற்ருேரும் ஒருங்கே படித்தின்புறும் அந்நூலிலிருந்து நான்கு அடிகள் இங்குத் தருகின்றேன்.

"ஆனந்த சின்மய ஹரே கோபிகா ரமண
ஞானென்ன பாவமது தோன்னுய்க வேணமிஹ
தோன்னுன்ன தாகிலகிலம் ஞானிதென்ன வழி
தோன்னேணமே வரத நாராயணுய நம"

(நானென்ற எண்ணம் உள்ளத்தில் தோன்ருதிருக்க வேண்டும்; மறித்து அவ்வெண்ணம் தோன்றுவதாயின், இவ்வகிலமெல்லாம் நான் என்ற எண்ணம் தோன்றுமாறு அருள்புரிய வேண்டும்-என்று கேட்கிருர் கவிஞர்.)

உயர்ந்த கருத்துக்கள் நிறைந்த சுவைமிக்க இலக்கியங்களைப் படைத்தளித்த எழுத்தச்சனைப் பாராட்டிற்குரிய கவிஞுகை மட்டுமின்றி, மதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய ஆசிரியனுகவே மக்கள் கருதுகின்றனர். மலையாள மொழியிலே புதிய திருப்பத்தை உண்டுபண்ணி அது இன்றைய உருப்பெறுதற்குக் காரணமாக இருந்தமையால் 'மலையாள மொழியின் தந்தை' எனவும் அவர் அறியப்படுகின்ருர்.

# அறிந்துமறிந்திலம்

(கா. பாக்கியரத்தினம், கொழும்பு)

''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத் துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள''

அங்கிலப் பரப்பிற்கீடாக

''வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்''[1] டான்,

''நிலந்தரு திருவிற் பாண்டிய''[2] னெனச் சிறப்புப் பெய ரும்பெற்றுன், தென்னவன். பழந்தமிழ்ப் பனுவல் பகன்றி டுமிஃது அறிவால் மறுக்கப்படு பொய்க் கதையா வன்றேல் அனைத்தாலும் மறுக்க முடியா உண்மைப் பெருளா வென் பது ஆயத்தக்கது.

முகிஞ்சிதரோ நாகரீகம் திராவிட[3] மூலத்தது என்பர் பேராசிரியர் மசுமதார்[4]. சிந்து வெளிமக்கள் சமர் (Samer) இலிருந்து ஆங்குக் குடியேறியவர்களாயிருக்கக் கூடிய நிலையில்லையெனக் கூறுவர். சிந்துவெளி நாகரீகத்தையும் மெசப்பொத்தேமிய நாகரீகத்தையும் நன்கு சீர்தூக்கிய சேர்மோட்டிமஉவீலர்[5]. மெசப்பொத்தேமியாவிலும், நைல் நதிப் பள்ளத்தாக்கிலும் வாழ்ந்த மக்கள் மட்டுமின்றி இந்தி யாவிலும் சீனுவிலும் அனுகூலமான பகுதிகளில் வாழ்ந்த

---

1. சிலப். காடுகாண் காதை, 18-22.
2. தொல். பாயிரம்
   ''நிலந்தரு பேருதவிப்
   பொலந்தார் மார்பின்னெடியோ னும்பன்''
   (மதுரைக் 60-61)
3. தொல் தமிழ் மக்கள்
4. Races and Culture of India by Majumdar
5. Early India & Pakistan by Sir M. wheeler

மக்களும் கி. மு. 6000க்கும் கி. மு. 3000க்குமிடையில் உழவுத் தொழிலைக் கைக்கொண்டு நாகரீக வாழ்க்கை நடத்தியிருக்கலாமென்றும், ஆரியர் இந்தியாவுக்கு வந்தஞான்று அவர்கள் திராவிட நாகரீகமாய தொடக்கத்திலிருந்துள்ள கபில நாகரீகத்துடன் தொடர்புபட்டு அதிலிருந்து மிகுதியும் கற்றுக்கொண்டனரென்றும் கூறுவர் எச். ஜி. உவெல்ஸ்[1]. இவையனைத்தையும் நடுநிலை நின்று நோக்குமிடத்துச் சிந்துவெளி மக்கள் தென்னிந்தியத் தொல்பதியிலிருந்து ஆங்குக் குடியேறிய தமிழ் மக்களென்பது தெளிவு.

சிந்துவெளியில் குடியேறப் பலர் பலமுறை முயற்சி செய்தும் முடியாமற்போக ஈற்றில் ஆற்றலு மறிவுமிக்க நற்பேறுடையவோர் தலைவனே வெற்றி கண்டதாய்க் காணக் கிடக்கின்றதெனக் கூறுவர் சேர்மோட்டிமஉவீலர். சிந்துவெளியிற் குடியேறியவர்கள் தமிழ் மக்களென முன்பு கண்டுளோமாகையானும், ஆங்ககழ்ந்தெடுக்கப்பட்ட புதை பொருள் பலவற்றிலும் பாண்டியர் சின்னமாய மீனுருவம் காணப்படுவதானும் இங்குக் குறிப்பிடப்பட்ட தலைவன் ''நிலந்தரு திருவிற் பாண்டிய''னெனக் கோடலியல்பு.

வடிம்பலம்பநின்ற பாண்டியன் நிலந்தரு திருவிற் பாண்டியனெனவும் பாண்டியன் மாகிர்த்தியெனவும் வழங்கப்பெறுவன் எனவும் இவன் தலைச் சங்கத்தினிறுதியில் வாழ்ந்தவனெனவும் கூறுவர் ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார்[1]. ''அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப'' எனக் களவியலுரை கூறுவதால் வடிம்பலம்ப நின்ற பாண்டியன்

1. a short history of the world by H. G. Wells

1. பாண்டியர் வரலாறு. S. V. சதாசிவ பண்டாரத்தார்

காலத்துச் சலப்பிரளயம் நிகழ்ந்தது தேற்றம், சதபதப் பிராம்மண எனும் வடமொழி நூல் பெருஞ்சலப் பிரளய மொன்றைக் குறிப்பதாயும், இந்திய, யூத, பாபிலோனிய வரலாறுகளில் குறிப்பிடப்பட்டிருப்பது அச் சலப்பிர ளயத்தையேயென்பது சலப்பிரளயத்தையிட்டுப் பொது வில் பேசப்பட்டுவரும் கதைகளாலறியக்கிடப்பதாயும், மெசப்பொத்தேமியாவில் சலப்பிரளயம் நிகழ்ந்த காலம் கி. மு. 3100ஆகக் கொளப்படுகின்ற தாகையாற் இந்தியா வில் சலப்பிரளயம் நிகழ்ந்த காலமுமஃதாகவே யிருக்க வேண்டுமென்றும், கலி ஊழியின் தொடக்கமாகக் கொளப் பட்டுவரும் கி. மு. 3102 அச்சலப்பிரளய நிகழ்ச்சியைக் குறிக்குமாண்டாக விருக்கலாமெனவும் கூறுவர் ஏ. டி. புசல்கர்[2] முற்போந்த சிலப்பதிகார வடிகளும் இறை யனார் களவியலுரைப் பகுதியும் சுட்டுவது மிச்சலப்பிரள யத்தையேயாம்.

இச்சலப்பிரளயத்தால் தன்னுடு குறுகிய நிலையில் தன் கீழ் வாழும் குடிமக்கட்கு வேண்டிய நிலப் பரப்பினைத் தேடித் தர வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வடதிசை சென்றான். சிந்துவெளியை அவர்கட்குத் தந்தான்.

பழந்தமிழ்ப் பனுவல் பகன்றுளவஃது அறிவால் மறுக் கப்படு பொய்க் கதையாகாதென்பதும் எனைத்தாலு மறுக்க முடியா உண்மை யென்பதும் இதுகாறும் கூறியவற்றாற் றுணியப்படுகின்றன.

---

2. Vedic age (Trudisinal history from the earbeat time to the accession of Parekshit by A. D. Pusalker)

# நான் வியக்கும் பாவலர்

(நாவரசன்)

உலகில் வாழும் வளமார் மொழிகளுள் நம் வண்டமிழ் மொழி தனிச்சிறப்புடையதாயிருத்தற்குக் காரணம் அதனிடத்தமைந்துள்ள இலக்கியச் செல்வங்களேயாம். இத்தகைய இலக்கியச் செல்வங்களை ஆக்கித் தமிழின் புகழுக்குக் காரணமாய் விளங்கியவர்களுள் - செய்குதம்பிப் பாவலர் என்னும் புலவரும் ஒருவர். அவரைப் பற்றி யறிவிப்பதே இக் கட்டுரையின் நோக்கம்,

நாஞ்சில் நன்னாட்டில் பண்டைய தலைநகரான கோட்டாறு எனும் ஊரில் கி. பி. 1876ஆம் ஆண்டில் பிறந்தார் செய்குதம்பிப் பாவலர் என்பார். அவருடைய தந்தையார் பக்கீர் மீரான் என்னும் பண்டைப் பெரியார். தாயார், ஹசரத் ஞானியார் சாகிபு என்னும் பெரியாரின் உயர்குலத் துதித்தவர். செய்குதம்பிஅவர்கள் இளமையிலேயே தம் வேதமொழியாகிய அரபியைக் கசடறக் கற்ருர்; தமது எட்டாம் அகவையில் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பெற்ற இவர், நான்கு வகுப்புக்களையும் ஒரே ஆண்டில் தேறி அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்ருர். பொருளாதார நெருக்கடியினுல் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டுத் தந்தந்தையாருடன் நெய்தற்ருெழிலில் ஈடுபட்டார். ஆயினும் தமிழ் மொழியின் மீது அளவிலாக் காதல் கொண்டு தமிழைக் கற்க உளங்கொண்டார். அவ்வமயம் கோட்டாற்றில் தமிழ்க் கடலாய் விளங்கிய பெரியார் சங்கரநாராயண அண்ணுவி என்பாரிடம் நாளுஞ் சென்று நற்றமிழ்ப்பாடங் கேட்டு வந்

தார் நாளடைவில் தமிழில் நல்ல பயிற்சிபெற்றதோடு மலையாளத்திலும் தேர்ச்சிபெற்ருர். இவ்வாறு இளமையிலேயே கற்பன கற்றுக் கலைநலம் பெற்ற இவருக்கு தமிழில் கவிபாடுந் திறமை அமைந்திருந்தது. இவர்தம் பாவன்மை கண்ட தமிழ்ப்புலவர்களால் பாவலர் என்றழைக்கப்பட்டார்.

கி. பி. 1895-ஆம் ஆண்டில் ஒருநாள் பெரியார் ஒருவருடன் சென்னைக்குச்சென்று ஞானியார் சாகிபு இயற்றியருளிய 'மெய்ஞ்ஞானத்திருப்பாடற்றிரட்டு' எனும் நூலை அச்சிடும் பணியைச் செவ்வனே செய்து முடித்தார். அப்போது இவர்தம் கலைத்திறமையைக்கண்டு மகிழ்ந்த அச்சகத்தலைவரான இட்டா பார்த்தசாரதிநாயுடு என்பவர் தமது பதிப்பகத்திலேயே பிழை திருத்தும் வித்துவானாக இவரை அமர்த்தி இன்புற்ருர். சில நாட்களில் பாவலர் அங்குள்ள வித்துவான்களின் தலைவராக ஆக்கப்பட்டார். அப்பதிப்பகத்தில் ஏனைய வித்துவான்களின் தலைவராக இருக்குங்காலை 'யதார்த்தவாதி,' 'இஸ்லாமிய மித்திரன்' என்னும் இரு பெரும் இதழ்களுக்கு ஆசிரியராக அமர்ந்து அவற்றை நன்முறையில் நடத்திவந்தார்.

சென்னையில் பணிபுரிந்துவந்த நாளில், முஸ்லிம் பெரும் புலவரான உமறுப்புலவர் பாடியருளிய சீருப்புராணம் என்னும் நூல் முழுவதற்கும் உரையெழுதி வெளியிட்டார். 'தேவலோகப்பழிக்குற்றவழக்கு' (தேவலோகத்து கிரிமினல் கேஸ்), ''வேதாந்தவிவகாரப்பழிக்குற்றவழக்கு'' (வேதாந்த விவகாரக் கிரிமினல்கேஸ்) என்னும் இரண்டு உரைநடை நூல்களையும் இயற்றி வெளியிட்டார். இவைகளோடு, பாவலர் இயற்றிய 'சீருநாடகம் என்னும் நூலும் இவர்தம்உரைநடை வன்மைக்குச் சான்று பகர்கின்றன.

பாவலர் அவர்கள் அவதானம் செய்யும் அரியதோர் திறமையும் பெற்று விளங்கினர். 1906-ஆம் ஆண்டில் கோட்டாற்றில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் **ஆற்றக்கோயாதங்கள்** என்னும் அறிஞர் தலைமையில் சோடசாவதானம் எனும் 16 அவதானத்தைச் செய்து 'சோடசாவதானி' என்னும் பட்டமும் பெற்றார். தமக்குப் பரிசிலாக வந்த பொன்னுடைகள் பலவற்றையும் தம்முடைய ஆசிரியர் பெருந்தகையாகிய அண்ணவி அவர்கட்கு அன்புடன் அளித்து நன்றிக் கடனாற்றினர். பிறகு 1907-ஆம் ஆண்டில், சென்னையில் மகாவித்துவான் கண்ணபிரான் தலைமையில் அறிஞர் பலரும் மேடையில் வீற்றிருக்கப்பலர் முன்னிலையில் பாவலர் அவர்கள் 'சதாவதானம்' என்னும் 100 அவதானங்களைப் பலரும் வியக்குமாறு செய்து 'மகாமதி', 'சதாவதானி' என்னும் பட்டங்களைப்பெற்றார்: அச்சகத்தலைவரான இட்டா பார்த்தசாரதி நாயுடு என்பவரால் இருகைகளுக்கும் தங்கத் தோடாக்கள் அணியப்பெற்றும், பலரால் பொன்னுடை போர்த்தப்பெற்றும் சிறப்பிக்கப் பெற்றனர். 1907-ஆம் ஆண்டில் கோட்டாற்றில் இவருக்குத் திருமணம் நடந்தது. இல்லறமாம் நல்லறத்திற்புகுந்து நன்மக்கட்பேற்றையும் பெற்றார்.

அக்காலத்தில், வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பாடியருளிய திருவருட்பாவை மருட்பா என மறுத்துப் பேசி வந்தவர் திரு. ரா. கதிர்வேற்பிள்ளை என்பவர் என்பது யாவரும் அறிந்ததே. பிள்ளையவர்கள் கருத்தை மறுத்து. 'அருட்பா அருட்பாவே' எனப் பலவிடங்களில் பேசி, வெற்றிபெற்றதோடு, 'கதிர்வேல்பிள்ளைக்குஎதிர்வேல் பிள்ளை' என்னும் பட்டமும் பெற்றவர் நமது பாவலர் அவர்கயேயாம். இறுதியில் காஞ்சியில் ஆணித்தரமாக வாதாடி, 'அருட்பா அருட்பாவே' என நிலைநாட்டி அருட்பா மருட்பா

போருக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை பாவலர் அவர்களையே சேர்ந்தது. அக்காஞ்சியம்பதியில் இவர்தம் நாவன்மை கண்டு வியந்த அறிஞர்களால் 'தேவாமிர்தப் பிரபிரசங்கக் களஞ்சியம்' என்னும் பட்டமும்பெற்ருர்.

மதுரையையடுத்த தொண்டியென்னும் ஊரில் சீருப் புராண உரை நிகழ்த்தச் சென்றிருந்தபோது அங்குள்ள மக்கள் 'கலைக்கடல்' என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர். திண்டுக்கல் மக்கள் பாவலரை உரை நிகழ்த்த அழைத்து அவருடைய அறிவாற்றலை வியந்து, 'அல்லாமா' (டாக்டர்) என்னும் பட்டத்தை நல்கினர். நாஞ்சில் நாட்டு மக்களால் 'தமிழ்ப் பெரும் புலவர்' என்று பாராட்டப்பெற்ருர்.

அக்காலத்தில் அந்நியராட்சியில் தந்நாட்டு மக்கள் படும் இன்னல்களைக் கண்டு, தாய்நாட்டு விடுதலைப் போரில் பெரும் பங்குகொண்டு உழைத்தார் நம் பாவலர். 1924-ல் இரவிபுதூர் என்னுமிடத்தில் நடைபெற்ற தேசியக் கூட்டத்தில் பாவலர் அவர்கள் தலைமைதாங்க, வ. வே. சு. ஐயர், டாக்டர் எம். இ. நாயுடு முதலிய அறிஞர்கள் சொற்பொழிவு செய்தார்கள் என்பதும். அக்கூட்டத்திலேயே அந்நியத் துணியெரிப்பும் நிகழ்ந்தது என்பதும் அறியத்தக்கன. அது முதல் பாவலர் அவர்கள் கதராடையையே அணிந்து வந்தனர்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாட்களில், தம்மை நாடி வரும் பலருக்கும் தமிழறிவையூட்டி அவர்களைப் பெரும்புலவர்களாகவும், அவதானிகளாகவும் ஆக்கிய பெருஞ் சிறப்புக்குரியரானுர். தென்கொம்புதூரில் வாழ்ந்து தமிழ்ப் பணி செய்துவரும் முதுபெரும் புலவர் தா. சாத்தரங்குட்டிப் பிள்ளையவர்கள் பாவலர் அவர்களின் முதல் மாணவராவார்.

இன்று நாஞ்சில் நாட்டில் உள்ள தமிழ்ப் புலவர்கள் பலர் 'பாவலரின் மாணவர்கள்' என்று தம்மைக் கூறிக்கொள்வதில் பெருமையுறுகின்றனர்.

பாவலர் அவர்கள் பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் முன் குறிப்பிட்ட நூல்களுக்குமேல், கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, திருநாகூர் திரிபந்தாதி, சம்சுத்தாசீன்கோவை, கல்வத்து நாயகம், இன்னிசைப் பாமாலை ஆகிய கவிதை நூல்கள் குறிப்பிடத் தக்கவை. கணக்கில் அடங்காத தனிப் பாடல்களும் இயற்றியுள்ளனர்.

இவ்வாறு நந்தமிழன்னையின் சிறப்பை நாற்றிசையிலும் பரப்பிப் புகழ்பெற்று வாழ்ந்துவந்த நம் பாவலர் அவர்கள் தஞ்சாவூரில் இருந்துவந்த சமயத்தில், கி. பி. 1950-ஆம் ஆண்டுப் பிப்ரவரித் திங்கள் 13ஆம் நாளில் இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகை எய்தினார்கள். பாவலர் தம் புகழ் பாரெங்கும் நின்று நிலவுவதாக!

வாழ்க பாவலர் திருப்பெயர்! வளர்க தமிழ் நெஞ்சம்!!

# இளவேனிற் பதிகம்

(புலவர் ந. செகதீசன்)

1. இன்னிள வேனில் வந்தான்!
எழுந்துயர் யாது மில்லை!
இன்னல்கள் யாவும் மாயும்!
இன்பமே வந்து பாயும்!
என்றநற் செய்தி தன்னை
இளையமென் தென்றல் கூறத்
துன்னிய தளிர்கள் மேவித்
துலங்கின சோலை யெல்லாம்!

2. வான்புகழ் வசந்த வள்ளல்
வருகையால் நெஞ்சம் பொங்கித்
தேனினும் இனியன் வந்தான்!
தீதறக் காக்க வந்தான்!
ஏனினுந் துயரக் கோலம்
எழுந்திடு கென்றே சொல்லி
வானெலாம் அதிரும் வண்ணம்
வண்டுகள் பாடி யாடும்!

3. வெய்யதாம் கோடை வென்றான்!
விரும்பிடும் வாழ்வு தந்தான்!
துய்யவன் களைப்புப் போக்கித்
தூயநல் லின்பங் கொள்ளப்
பையவே காற்று வீசப்
பாங்குடன் இசைமின் என்று
நொய்யதாம் கொடிகள் எல்லாம்
நுவன்றுமே இன்பம் செய்யும்!

4. பஞ்சமாய்ப் போன தாலே
பாங்குறப் பேண வில்லை!
கொஞ்சம்நீ பொறுத்தல் வேண்டும்
கொழுசுவைக் கனிகள் நல்கி
நெஞ்சினில் மகிழ்வு கொள்வோம்
நேயனே என்று சொல்லிக்
கெஞ்சிடும் மரங்கள் காட்சிக்
கிளர்ந்திடும் உள்ளந் தன்னை!

5. கிளைகளாம் கைகள் கொண்டு
கிண்ணமா மலர்கள் தம்மில்
திளைத்தநற் செடிகள் எல்லாம்
தேனினைத் தாங்கி நின்று
களைப்பினைப் போக்க விந்தக்
கள்ளினை உண்க வென்றே
இளையதாம் உள்ளத் தாலே
இயம்பின அன்பின் சொற்கள்!

6. பழுத்துமே தரையில் வீழ்ந்த
பண்பமை இலைக ளெல்லாம்
'பழுதிலா அன்பி னோடும்
பாட்டியர் காண வந்த
கெழுதகு பேரப் பிள்ளாய்',
கேடிலாத் தளிர்கள் தம்மை
அழுதிடச் செய்து நீயும்
பிரிந்திடல் ஆகா தென்னும்!

7. அருந்துயர் நீக்க வந்தான்!
அன்பினைப் பூண்டு வந்தான்!
மருந்தினு மினியான் தன்னை
மகிழ்வுடன் பாட வன்றே

மருவுக புட்காள்!'' என்று
மரந்தொறும் சென்று சென்று
கருங்குயில் பாடிப் பாடிக்
களிப்பினல் வானில் நீந்தும்.

8. வாகையே சூழ வந்தான்!
வறியரைத் தேடி வந்தான்!
பாகமாய்க் கற்ற நல்ல
பைந்தமிழ் ஆடல் எல்லாம்
தோகையை விரித்தே யிங்குத்
துலங்கிடப் புரிவோம் என்றே
ஓகையாய்க் கூடி யாடி
உவந்தன மயில்கள் எல்லாம்!

9. குன்றினில் அருவி வீழ்ந்து
"குதித்தினி தாட விங்கே
அன்பனே வருக! என்றன்
ஆருயிர்! வருக!'' வென்றே
தென்றமிழ் பாடி யன்பாய்த்
தீதற அழைக்குங் காட்சி
அன்றலர் மலர்கட் கெல்லாம்
அகத்தினில் இன்பஞ் செய்யும்!

10. இன்பமே வருக! என்றன்
ஈடிலாத் தலைவ! நல்ல
வன்மைசால் வள்ளால்! இங்கே
வருகநீ விரைந்தே என்று
பன்முறை சொல்லிச் சொல்லிப்
பைந்தளிர்க் கைகள் தம்மால்
அன்புடன் அழைத்து நின்ருள்
அழகெனும் பெண்ணுள் அங்கே!

# துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

வித்துவான், ஆ. சிவலிங்கனர் அவர்கள்,
விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

புனையெழில் வடிவி னுளோர் பொதுமகட் கண்ட மைந்தன்
மனமெனப் புலவர் நெஞ்சம் மருளுமின் தமிழ்ப்பா மாலை
சினவிடை யவர்க்கே சாத்தும் சிவப்பிர காச னென்னும்
முனவனெம் அடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்.

## 1. முன்னுரை

கற்பனைக்கொரு களஞ்சியமென விளங்குபவர் துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள்; "விரைவிடை யிவரும் நினைப் பிறவாமை வேண்டுநர் வேண்டுக மதுரம், பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும் பிறவியே வேண்டுவன் தமியேன்" (சோணசைலமாலை 39.)எனத் திருவண்ணமலை யிறைவனிடம் வேண்டியதற் கேற்பப் பல தமிழ்ச்சொல் மலர்கொண்டு நூல்மாலைகளை யிறைவனுக்குத் தொடுத் தணிந்தவர். இவருடைய கற்பனைகள் படித்து இன்புறுதற் குரியன. இவரைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் அல்லது நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர் என்றழைப்பர் அறிஞர். இவர் காஞ்சியில் தோன்றினும், துறைமங்கலத்தில் அண்ணமலை ரெட்டியாரால் போற்றப்பட்டுப் பெரிதும் தங்கியிருந்தமை யால் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்றும், நல்லாற்றூ ரில் இறையடி நீழல் எய்தியமையால் நல்லாற்றூர்ச் சிவப் பிரகாசர் என்றும் வழங்கப்பெற்றூர். இங்ஙனம் ஊர்ப் பெயர் அடுத்துக் கூறப்படுவதால் ஒரு நன்மையுண்டு; அதா வது ஒரேபெயர் கொண்ட பலரைப் பிரித்துணர்தற்கு இயலுமதுவே. துறையூர்ச் சிவப்பிரகாசர், மதுரைச் சிவப் பிரகாசர், திருவாரூர்ச் சிவப்பிரகாசர், சிதம்பரம் சிவப்பிர காசர், வள்ளல்சிவப்பிரகாசர் சிவப்பிரகாசதுரை, சிவப்பிர

காச பண்டிதர் ஆகியவர்களின் வேருனவர் நம் சிவப்பிர காசர் என்பதை நாம் அறியலாம்.

நம் அடிகளின் வரலாற்றினை உரை நடையில் முதன் முதலில் எழுதியவர், சிதம்பரம், ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் ஆவர். இவர்கட்கு முன்னர்க் கேள்வியளவில் வரலாறு வழங்கியிருக்கவேண்டும். சேயூர்-ப. கந்தசாமித் தம்பிரான் பதிப்பித்த சிவஞான பாலயசுவாமிகள் தாலாட்டு முதலிய நூல்கள் அடங்கிய பதிப்பில் உரை நடையில் இவரது வரலாறு சிறிது மாறுபட எழுதப்பட்டுள்ளது. செய்யுள் நடையில் முருகதாச அடிகளும், திருவோத்தூர்ப் பாநுகவி அடிகளும் இயற்றியுள்ளனர். பாநுகவியடிகள் இராமலிங்கசுவாமிகள் எழுதிய வரலாற்ருேடு ஒத்துப்பாடியுள்ளனர். முருகதாச அடிகள் வரலாற்றினை முழுதுங் கூருது தெரிந்த அளவிற் சில கூறினர். ஈண்டு இராமலிங்க சுவாமிகள் எழுதிய வரலாற்றினை மாறுபாடின்றி யப்படியே எடுத்தெழுதிப் பிறர் வரலாறுகளில் ஆங்காங்குக் காணப் படும் வேறுபாடுகளை மட்டும் சுட்டிச் செல்வேம்.

## 2 வரலாறு I

காஞ்சீபுரத்திலே ஏறக்குறைய இருநூற்றெண்பது வருடங்களுக்கு முன் தொண்டைமண்டல வேளாளர்க்குத் தீக்ஷாகுருவாகக் குமாரசுவாமி தேசிகர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருக்கார்த்திகைத் தரிசனத்திற்காகத் திருவண்ணுமலை யாத்திரைக்குப் புறப்பட்டு ஒரு நாள் வழியில் ஒரு நந்தன வனத்திற்றங்கிச் சிவபூசை முடித்து, அன்று சாயங்காலமே தாங் குறித்த அத் தலத்தை யடைந்து அங்குள்ள ஈசானிய தீர்த்தத்திலே அநுட்டானஞ்செய்து கொண்டு, பூசைப் பேடகம் எங்கே என்று பரிசனங்களிடத்து வினவ, அவர்கள், பகலிலே தங்கியிருந்த விடத்தில் வைத்து மறந்து வந்ததாக அச்சத்தோடு விண்ணப்பம்

செய்தனர். அதுகேட்டு, மன மிகக் கலக்க முற்று அப் பரிசனங்களைப் பகல் தங்கியிருந்த நந்தன வனம் வரையும் பரிசோதித்து வரும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஓரிடத்தில் போய், நம்முடைய ஆன்மார்த்தமாகிய உடையவரை விட்டுப்பிரியும்படி நேரிட்டதே! என்னும் வருத்தத்தால் அன்றிரவு முழுதும் நித்திரையின்றிச் சிவத்தியானம் செய்து கொண்டிருந்தனர். அத் தருணத்தில் அவரது சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், ஒரு சங்கமத் திருவுருவங்கொண்டு அவரிடத்திற் கெழுந்தருளித் தம்மெதிர் வந்து தமக்குநிகழ்ந்த ஆபத்தைத்தெரிவித்து அன்போடு வணங்கி நின்ற அவர்மீது கிருபாநோக்கம்செய்து "நீர் அங்கம்வேறு இலிங்கம்வேருக இருந்தமையால் இவ்வாறு பிரியும்படி நேரிட்டது; இலிங்காங்க சம்பந்தியா யிருந்தால் இவ் வண்ணம் நேரிடுதல் இயலாது; உமது பூசைப் பேடகம் நாளை யுதயத்தில் வந்து சேரும்; நீர் இது முதல் இலிங்க தாரணம் செய்து கொள்ளும்" என்று அநுக்கிரகிக்க, அவர் இச் செய்கை தமது சீடர் பந்துக்களுக்கு விரோதமாக இருக்கும் என்பதை விண்ணப்பித்து நின்றனர். அது கேட்ட சிவபெருமான், "அந்தச்சீடர் முதலியோரால்பெறப்படும் பயன் சிறிதுமில்லை. நமது கட்டளைப் படி நீர் சிவலிங்க தாரணம் செய்துகொண்டால் உமக்கு மூன்று புத்திரர்களும் ஒருபுத்திரியும் பிறப்பார்கள். அவர்களால் இம்மை மறுமை யின்பங்களும் முத்தியும் சித்திக்கும். ஆதலால் இவ் வாலயத்திற்குத் தெற்கு வீதியிலுள்ள மடத்திலிருக்கும் குருதேவரிடத்திலே தாரண தீக்ஷை செய்துகொள்ளும்" என்று வற்புறுத்தி ஆணையிட்டு, வீரசைவ சமயாசாரங்களையும் போதித்து, அவ்வாறே குருதேவருக்கும் கட்டளையிட்டு மறைந்தருளினர்.

மறுநாட் காலையில் சிவபெருமானது திருவாக்கின் படியே பூசைப் பேடகம் வரப்பெற்று, ஸ்ரீகுருதேவரால்

அனுப்பப்பட்ட அடியார்களோடு மடாலயத்தையடைந்து, குருதேவரைத் தரிசித்து அவராலே தாரண தீக்ஷை செய்யப் பெற்றுத் திருக்கார்த்திகைத் திருவிழா நிறைவேறிய பின் குருதேவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு காஞ்சீபுரத்துக்கு வந்து, தமது அநுட்டானப்படியே சீடர்களுக்குந் தாரண தீக்ஷை செய்துகொண்டிருக்க, அக்காலத்திலே, அவருக்கு அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடியே மூன்று புத்திரர்களும், ஒரு புத்திரியும் அவதரித்தார்கள். தந்தையாராகிய குமாரசாமி தேசிகர் களிகூர்ந்து அவர்களுக்கு, முறையே **சிவப்பிரகாசம், வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம்பிகை** என்று பெயர் சூட்டி முதல் மூவரும் கல்வியிற் பயின்று வருங்காலத்தில் சிவலிங்க ஐக்கியமாயினர்.

பின்பு மூத்தவராகிய சிவப்பிரகாச சுவாமிகள், தமது சகோதரர் முதலியவர்களோடு திருவண்ணாமலைக்குப்போய்க் குருதேவரைத் தரிசித்து அங்கே வாசம்செய்துகொண்டு, தமது கல்வி முயற்சியிற் றளராது வாழும் நாள்களுள் ஒரு நாள், அந்தச் சோணசைலத்தைப் பிரதக்ஷணம் செய்து வரும்போதே **சோணசைல மாலை** எனப் பெயரிய நூறு செய்யுள்களால் அதனைத் தோத்திரம் பண்ணினர். பின்னும் பேரிலக்கணங்களைப் பெரிதும் கற்க விரும்பித் தமது சகோதரர்களுடனே தக்ஷிண தேசத்திற்குப்பிரயாணமுற்று வாலிகண்ட புரத்திற்குத் தென்பாகத்திலுள்ள **துறைமங்கலம்** என்னும் நகரத்தைச் சார்ந்த ஒரு நந்தனவனத்தில் சிவ பூசை செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில், அக் கிராமாதிபதியாயும், சிவலிங்க தாரியாயும், குருலிங்க சங்கம பத்தியிற் சிறப்புற்றவராயும் விளங்கிய **அண்ணாமலை ரெட்டியார்** என்பவர் சிவப்பிரகாச சுவாமிகள் வரவைக் கேள்வியுற்று, அங்கடைந்து தரிசித்த மாத்திரத்தில், அவரிடத்தே

அநுக்கிரகம் பெற விரும்பி அடிமை பூண்டு "சுவாமீ! தேவரீர் இவ்விடத்தில் வாசஞ்செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்து அவரை யுடன்படுத்தித் தங்கள் குருவாகிய சென்னவசவையர் மடத்திற்கு மேற்றிசையில் ஒரு திருமடங் கட்டி அதில் சுவாமிகளை எழுந்தருளுவித்து அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத்தொண்டராய் அமர்ந்திருக்க, சிவப்பிரகாச சுவாமிகள் அவருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு இரண்டு ஆண்டு வரையில் அங்கே யெழுந்தருளி யிருந்தார்.

அதன் பின்பு தாங்கொண்ட கருத்தை நிறைவேற்ற விரும்பி தக்ஷிணதேசத்திற்குச் செல்லவேண்டும் என்பதை அவ்வண்ணாமலை ரெட்டியாருக்கு அறிவுறுத்தித் திருநெல்வேலியையடைந்து, தாமிரபருணிநதி தீரத்திலிருக்கின்ற சிந்துபூந்துறையில் தருமபுர ஆதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகள் இலக்கண விலக்கியங்களில் அதிவல்லவர்களாய் இருக்கின்றார்கள் என்பதைக் கேள்வியுற்று, அவ்விடத்திற்சென்று சுவாமிகளைக்கண்டு, தாம் இலக்கணம் கற்கவேண்டிவந்தமையைத் தெரிவித்துக்கொண்டனர். அச்சுவாமிகள், சுவாமிகளுடைய இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு " 'கூ'என்பதை முதற்கொண்டு 'ஊருடையான்' என்பதை இடைப்பெய்து 'கூ' என்பதையே ஈற்றினும்கொண்டு முடியும்படி ஒருவெண்பாப் பாடுக" என்று கூற, சுவாமிகள்,

> குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
> முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
> தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
> ஊருடையான் என்னும் உலகு

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினார். வேலை வெண்பாவினுள் வடக்கோடு தேருடையான் என்று அமைத்

தமையை அச்சுவாமிகள் வியந்து பாராட்டி, சுவாமிகளைத் தழுவித் தம் மருகிருத்திச் சுவாமிகள் சகோதரர்களாகிய வேலைய சுவாமிகள், கருணைப்பிரகாச சுவாமிகள் என்னும் இருவருக்கும் ஒரு பக்ஷத்துள் பஞ்சலக்ஷணங்களையும் பாடம் சொல்லி முடித்தார். அதுகண்ட சிவப்பிரகாச சுவாமிகள் பேருவகையுற்று அண்ணாமலைரெட்டியார் என்பவர் தங்களுக்கு வழிச்செலவிற் குபகரித்த முந்நூறு பொன்னையும் குருதக்ஷிணையாக வைத்து உபசரிக்க, அச்சுவாமிகள், "இது நமக்கு வேண்டுவதில்லை; தூஷித்தலையே இயல்பாகக் கொண்டு திருச்செந்தூரில் வசிக்கும் தமிழ்ப்புலவர் ஒருவரைத் தங்கள் முன்னிலையில் வெற்றிகொண்டு அவர் வந்து நம்மை வணங்கும்படிச் செய்தலே குருதக்ஷிணையாகும்', என்று மறுத்தருளினர்.

அக்கருத் தறிந்த சுவாமிகள் அதற்குடன்பட்டு அவர் மாணாக்கரோடும் திருச்செந்தூருக்குப் போய் முருகக்கடவுளைத் தரிசனம்செய்து பிரதக்ஷிணம் வரும்போது, அச்சுவாமிகளாற் சுட்டப்பட்ட தமிழ்ப் புலவர் எதிர்ப்பட்டுச் சிவப்பிரகாச சுவாமிகளை யாவரென்று அவருடன் வந்த மாணாக்கரிடத்திற்றானே வினவி, மேற்படி சுவாமிகளிடத்தில் பாடங்கேட்ட சுவாமிகள் என்பதையறிந்து கொண்டு அவர்களைத் தமது வழக்கப்படியே தூஷிக்கத் தலைப்பட்டார். அப்பொழுது சுவாமிகளுக்கும் புலவருக்கும் கலகம் நேரிடப் புலவர்,சுவாமிகளை' 'நூதனவகையாற்பாடி வெற்றி பெறுவோம்' எனத் துணிந்து, ''நாமிருவரும் நிரோட்டக யமகம் பாடுவோம், முன்னர்ப்பாடி முடித்தவர்க்கு அஃதியலாதார் அடிமையாவோம்'' என்று வாக்குத்தத்தம் செய்தார். சுவாமிகள், தங்கருத்து நிறைவேறுதற்கு வாயில்

இதுவே யென்று கருதி அதற்கிசைந்தருளி அவரோடு பாடத்தொடங்கி, உடனே அத்தலத்து முருகக்கடவுள்மீது நிரோட்டகயமக அந்தாதித் தொடையாக முப்பது கட்டளைக் கலித்துறை பாடி முடித்தருளினர். அதுகண்ட புலவர் தாம் ஒரு செய்யுளேனும் பாடி முடியாமையை யுணர்ந்து சுவாமிகளுடையதிருவடிகளை வனங்கி 'அடிமையாயினேன்' என்று விண்ணப்பஞ் செய்ய, சுவாமிகள், தமது அடிமையாய் அமைந்த அப்புலவரை ஆதீனத்திற் கழைத்துவந்து அச்சுவாமிகளுக்கு அடிமையாக்கிவிட்டார். அச் சுவாமிகள் திருவுளமகிழ்ந்துசிவப்பிரகாசசுவாமிகளைப் பார்த்து "தாங்கள் பாடியசெய்யுளில் சிவபிரானுக்குரிய தலம் சிதம்பரமேயெனச்சுட்டிக் குறிப்பால் விளக்கினமையால் அத்தலத்திலே சிலகாலம் வாசம் செய்தருளுக'' என்று விடை கொடுத்தனுப்பி யருளினர்.

சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி, சிவஸ்தலங்கள்தோறும் சென்று சுவாமிதரிசனம் செய்து, துறைமங்கலத்தைச் சார்ந்து முன் போலவே அண்ணுமலைரெட்டியார் என்பவருக்குத் திருவருள் பாலித்து அவரது வேண்டுகோளின்படி அவராளுகையிலமைந்த வாலிகண்டபுரத்தின் வடமேற்பாகத்துள்ள திருவெங்கைமாநகரத்திலே தம் பொருட்டு அவராற் கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்து கொண்டு அத்தலத்திலுள்ள பழமலை நாதர்மீது **திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்காரம்** என்னும் பிரபந்தங்களை யியற்றியருளினர். அக் காலத்தில் ஒரு நாள் அவ்வூர்ப் பிடாரியார் உற்சவ இரதத்தால் அடிகுயார்க் உபயோகமாகத் திருமடத்தெதிரிலிருந்த முருங்கைமரம் அழிந்தமை கண்டு,

திருந்துதமிழ் இலக்கணவைந் திணைக்கோவை
விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை
வெங்கைநகர்ப் பிடாரி காண்க
விரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்கு நீநம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென்
ருலுனக்கு முறைய தாமோ

என்னும் திருவிருத்தத்தை யருளிய மாத்திரத்தே, அவ்விர தம் அழிந் தொழியத் தாம் சில காலம் அங்கிருந்து துறை மங்கலத்தை யடைந்தருளினர். (தொடரும்)

# தமிழர் வரலாற்றில் தருக்காக்குடி

மணவை கா. மாரன், ஆசிரியர்.

அன்பு, இன்பம், கண்ணோட்டம், அறிவு, அறம், மறம், முதலிய நிறைந்த தமிழர் நெஞ்சு, மலரும், கனியும் உவந்த ளிக்கும் கா சூழ்ந்த மணிப்பொய்கை ஒப்பதாகும்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்

அறத்திற்கே அன்புசார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (குறள்)

என்ற இலக்கணங்களுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள். அது புகழ் மொழியில்லை என்பது வள்ளுவம் ஆய்ந்தோர் உணர்வர். அகம் புறம் கண்டோர் தெளிவர். இன்னும் வெளிப்படையாகக் கூறினல் மனத்தால் உணர்ந்து வாயால் பகர்ந்து எழுத்தால் வடித்து வற்றுத உயிர்-ஆருக உலகமெங்கும் தென்றல் நடை பயிலும் தமிழர் தம் நூற்களும், மற்றைய சான்றுகளும் அப்பண்புணர்த்தும் காட்சிகளாகும்.

இலக்கியத் தேன் கடல் நீந்தமுனைந்தவர்
என்றும் அங்கேயே வாழ்ந்திடுவோர்
கலக்க வரும் வெறியானையுமே—தமிழ்
கற்றுச் சிறந்தே பணிவாகும். (சிரிபாப்பா)

இல்லையேல், கால்டுவெல் துரைமகனர், தமிழையும், தமிழரையும் பற்றி இறவாத புகழ்மொழி இசைந்திரார்; மற்றொரு மேல் நாட்டார் திருக்குறளையும் திருவாசகத்தையும் தன்னிதய மலராகப் போற்றி, தன்னை அடக்கம் செய்யும் கல்லறையில் தமிழ் மாணவன் என்று பொறித்து வைக்கப் பணித்திருக்க மாட்டார்; பிறிதொருவர் தன்பெற்ருேர் அன்பால் இட்ட பெயரை மாற்றி வீரமாமுனிவர்

என்று அழகு தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொள்ள மன மொப்பி யிரார். இப்படி எந்நாட்டவரும் போற்றிப் புகழும் பெற்றியைத் தமிழகத்திற்குத் தந்த பெருமை, சிறப்பாக வும், குறிப்பாகவும் சொன்னல் அது பாண்டியரையும் அவர்கள் காத்து வளர்த்த மதுரைத் தமிழ் மன்றத்தையுமே சாரும். அது பல்லாரும் முடிந்த முடிவாகும்.

அப்பாண்டியர் குடித்தோன்றலில் ஒருவன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன். இவனே அடிக்கடி உயர்ந் தும் தாழ்ந்தும் வந்த பாண்டியராட்சியை பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஈடும், எடுப்பும் அற்ற ஒரு பேரரசாகத் தோற்றுவித்தவன். சோழரையும் சேரரையும் வென்று திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்றும், மூவகைத் தமிழ், ஐவகை வேள்வி, அறுவகைச் சமயம் எழுவகைப் பாடல் முதலியவை காத்தவன் என்றும் கல்வெட்டுக்களால் புகழப்படுபவன். இவனைப் பற்றிய புதுக்கோட்டை வட்டம் திருமயம் பகுதி, கண்ணனூர் பாலசுப்பிரமணியர்கோவில் கல்வெட்டுச் செய்தி படித்து இன்புறத் தக்கது.

இவன் குடிகள் வரியால் பாதித்துத் துன்புறும் போது அறிந்தோர் கூறக்கேட்டு அவர்பால் கண்ணோடி அச்சுமை குறைக்கும் பண்புள்ளம், இவனது, புதுக்கோட்டை, திரு மயம் பகுதி நெய்வாசல் அகத்தீசுவரர் கோவில் கல்வெட் டால் அறியக்கிடக்கிறது.

இவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தவர்களில் மாறவர் மன் குலசேகர பாண்டியனின் இளையமகன் வீரபாண்டி யன் கட்டிய கோவில்களில் சில பாண்டியநாட்டின் வட இறுதி எல்லையான பறம்புநாடு புறமலை நாடு எனத் தொட ங்கி தெற்கிலும் மேற்கிலும் விரிந்து செல்லும் பகுதியில் இருக்கின்றன. இவைகள் அரசினரால் கண்டு பிடித்துள்ள

செய்தி அவ்வூரினரால் கூறப்படுகிறது. அக்கோவில்களில் ஒன்றினைப் பற்றியதே இக்கட்டுரையின் கருவாகும்.

**இறைவன் திருக்கோவில் இருக்குமிடம்:—**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் தருக்காக்குடியில் ஊரை யடுத்து வடக்கே உள்ளது. இவ்விடத்திற்குச்செல்ல வேண்டுமானுல், மதுரை, திருச்சி, மேலூர் வழியாகச் செல்லும் பெருஞ் சாலையில் முப்பதாவது மைலில் இறங்கி அவ்விடத்திலிருந்து மேற்கே, அரை மைல் தூரம் நடந்துசென்ருல் இவ்வூரைக் காணலாம்.

**கோவிலின் தோற்றம்:-**

இக்கோவில் கட்டிய வீரபாண்டியன் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் இளைய மகன். இவன் அண்ணன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் எனப்படுவான். இவ்னுக்கு இவன் தந்தை பட்டத்தைக் கொடுக்காது தகுதியும் சிறப்பும் நோக்கி வீரபாண்டியனுக்குக் கொடுத்தான். காலம் கணித்த பெருந்தகையாளர்களின் ஆய்வுப்படி இவனது ஆட்சித் தொடக்கம் கி. பி. 1296, முடிவு கி. பி. 1342 ஆகும். இக்கோவில் இவனது ஆட்சி ஆண்டு ஐந்தில் கட்டப்பெற்றது என்று இக்கோவில் கல்வெட்டில் பேசப்படுவதால் அவ்வாண்டு கி. பி. 1301 ஆகும். கோவில் தூங்கானை வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ள 'சிறியது' முற்றுப்பெருதது. இக்கோவில் புறச்சுவர்களில், வடக்கு, மேற்கு, தெற்கு முப்பக்கங்களில் கல்வெட்டுக்கள் உள்ளன. கருவறைமண்டபம் மட்டும் கட்டப்பட்டுள்ளது. முன்மண்டபத்திற்கு அடிக்கற்கள் இடப்பட்டு கட்டாதுவிடப்பட்டுள்ளது. கருவறையில் உள்ள இலிங்கம் நன்கு செப்பனிடப்படாதது. அடிப் பகுதி நன்கு செப்பனிடப்பட்டது. இவ்விலிங்கத்தின் வடிவு, அளவு, தன்மை இவைகளை ஒத்த இலிங்கங்கள் இரண்டில் ஒன்று வீரபாண்டியன் காலத்தில்

மேன்மலையூர் என்று அழைக்கப்பட்டு இன்று சொக்கலிங்க புரம் என்று அழைக்கப்படும் ஊரில், இவ்விடத்திலிருந்து கிழக்கே நான்காவது மைலில் இக்கோவில் போன்று குறை யான நிலையில், அழகிய சோழீசுவரர்கோவிலிலும்; தருக்காக் குடியிலிருந்து மேற்கே இரண்டரை மைலில் உள்ள மணப் பச்சேரியைச் சேர்ந்த சிரான்பட்டிக்காட்டில் கோயிலற்ற இடத்திலும் காணப்படுகின்றன. இம்மூன்றும் நல்ல கருங் கல்லில் அடிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலைச்சுற்றி தட்சிணு மூர்த்தி சிலை அம்மன் சிலை. திருமால், இந்திரன், நந்தி, விநாயகர் முதலிய சிலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு நாயக்கர் கால இறுதியில் இப்பகுதிக்கு உரிமை உடையான் சொக்கலிங்க நாயக்கன் கோவில் எடுத்துள்ளான் என அக் கட்டிடத் தன்மையைக்கொண்டு உறுதியாகக் கூறலாம். அவைகளும் இடிந்த நிலையில் உள்ளது. இக்கோவிலுக்கு இன்று வழிபாடு முதலியவை இல்லை.

**கல்வெட்டுச் செய்திச் சுருக்கம்:—**

இக்கோவில், கோச்சடையபன்மரான திரிபுவனச் சக் கரவர்த்திகள் திரு. வீரபாண்டியத்தேவர்க்கு ஆட்சி ஐந் தாம் ஆண்டு மகர ஞாயிறு பூர்வபட்சத்து பஞ்சமி திதியும் புதன்கிழமையும் பெற்ற உத்திராட நட்சத்திரத்தில் கட்டப் பட்டுள்ளது.

இவ்வாண்டில் தருக்காக்குடி ஊரவரும், சூழமமரைக் கண்டன் ஊரவரும், மேன்மலை ஊரவரும், வரதராமன் ஊரவரும், ............ஊரவரும் தருக்காக்குடி அழகன் சடை பிரம்ம உலக நாடாள்வானுன பொன்னகையன் முன்பாக பல்லவராய சாளுவப் பொன்னம்பிள்ளை புலிவிடைய வேணுக்கு கோவில் காரியம் செய்துவர குறிப்பிட்ட நிலங் களை இறையிலியாக நாட்டார் சம்மதித்துக் கொடுத்தோம் என்ற செய்தி தெரியவருகிறது.

**எனதாய்வுரை:—** இக்கல்வெட்டால் வீரபாண்டிய னுக்கு, கோச்சடையன், பராக்கிரம பாண்டியன், கோச் சடையபன்மர், திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்னும் சிறப்பு அடைமொழிப் பெயர்களை உடையவன் என்று அறி யப்படுகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் கொண்டி ருந்த திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தை இவ னும் கொண்டிருந்ததால் இவன் ஆட்சித் தொடக்கத்தில் விரிந்து பரந்துகிடந்த பாண்டிய நாட்டை ஆண்டவனாக வேண்டும்.

இப்பகுதியில் அரசியல் அதிகாரியாக இருந்தவன் உலக நாடாள்வானான பொன்னகையன். இக்கோவிலைக் கவ னித்து வந்தவன் பல்லவராய சாளுவப் பொன்னன் பிள்ளை புலிவிடைய வேளு என்பவன்.

கல்வெட்டில் குறிக்கப்பட்ட ஊர்களில் தருக்காக்குடி ஒன்றுமே பழைய பெயரில் அழைக்கப்படுகிறது. மேன்மலை யூர் சொக்கலிங்கபுரம் என்று அழைக்கப்படுகிறது. மற்ற ஊர்கள் அறிய முடியாதபடி மாறிவிட்டன. அவைகளை அறிய முயற்சி செய்துவருகிறேன்.

தருக்காக்குடிக் கோவில் முற்றுப்பெறாதபடி நின்று விட்டதால் வீரபாண்டியன் தனது ஆட்சி ஐந்தாம் ஆண் டுக்குமேல் வேறு கோவில்கள் கட்டவில்லை என்று முடிவா கக் கூறலாம். ஏனெனில் அவ்வாண்டுவரை அவன் அமைதி யாக ஆட்சி செய்துள்ளான். தான் முடிசூட்டப்பெற்றதை விரும்பாத அண்ணன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் தனது தந்தையை, அறம்நீங்கி மறவெறியால் கொன்று தன் தம்பியையும் தாக்க இருவருக்கும் அடிக்கடிப் போர் மூண் டது. தன்னாட்சியை நிலைநிறுத்தப்போர் தொடுத்தவண்ணம் இருந்ததாலும், இச்சமயம் பார்த்து முகமதியர்கள் படை எடுத்துவந்து நாட்டைக் கைப்பற்றியதாலும், அவர்கட்கு

இவன் அடங்கி இருந்ததாலும், இவன் விருப்பத்திற்கு எதுவும் செய்ய முடியாதவனுக இருந்தான்,

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலேக்கும்
கோல் குறும்பும் இல்லது நாடு—

என்னும் வள்ளுவர் வாக்குப்படி இவைஇல்லாததேநாடுஎனப்படும். இவை இருந்தால் மன்னன் மனத்தில் அமைதியில்லே; மக்கள் மனதில் மகிழ்வு இல்லே; மன்னுயிர் காக்கும் வளம் இல்லே. இறைவன் விழா எடுப்பதும் நின்றுவிடும். இந்த அவல நிலேயே இக்கோவில் முற்றுப் பெருமைக்குக் காரணம். இவன் ஆட்சிக்குப்பின் இப்பகுதியை ஆண்ட சிற்றரசர்கள் பாண்டியர்களின் செஞ்சோற்றுக் கடனே எண்ணுது போகவே,

மனமாணு உட்பகை தோன்றின் இனமாணு
ஏதம் பலவும் தரும் (குறள்) –என்றபடிச் சுந்தரபாண்டியனின் தீய செயலும் பாண்டிய மரபைப் பாண்டியநாட்டின் தென்பகுதிக்கு ஓட்டியது. அதனுல் இத்திருக் கோவில் மணி ஓசை அடங்கித் தமிழன் வரலாற்றினே,

எங்கள் மொழியும் தமிழடா
எங்கள் உயிரும் அமுதடா!
சிங்க மறவர் செயல் புரிந்து
செம்மை செய்த நாடடா!—

என்று கூறிக்கொண்டு நிற்கிறது.

# முயல்கள் வர்ண முட்டைகள் போட்டநாளிலே ஜெர்மனியில் பழைய ஈஸ்டர் வழக்கங்கள்

[திருமதி. சசிகலா திரிவேதி]

உதய சூரியனின் கதகதப்பான கிரணங்கள், இடம் பெயரும் பறவைகளின் இனிய பாட்டுக்கள், பசும்புல் வெளியில் மெல்லிதழ் விரிக்கும் பல வர்ணப் பூக்கள் இவையெல்லாம் ஒவ்வோராண்டும் கிறித்துவ மதத்தவருக்கு மிக முக்கியமான லெனிட் என்னும் பண்டிகையின் அடையாளங்கள். சிலுவையில் மாண்ட ஏசுகிறிஸ்து மூன்று நாளில் எழுந்துயிர்த்ததைக் கொண்டாடுவதற்கான இந்தப் பண்டிகை ஜெர்மனியிலும் முக்கியமானது. கிறித்துவ சகாப்தத்துக்கு முந்திய பல பழக்கங்கள் கூட ஈஸ்டர் சம்பிரதாயங்களில் இடம் பெற்று வழி வழியாக வந்திருக்கின்றன; அவை அடிக்கடி மாறியும் இருக்கின்றன. நெடிய குளிர் காலம் முடிந்து இயற்கை புத்துயிர் பெற்று விழிப்படையும் கோலாகலத்தைக் குறிப்பவை இந்தச் சம்பிரதாயங்கள்.

ஈஸ்டருக்கு ஜெர்மன் மொழியில் ''ஆஸ்டர்'' என்று சொல்கிறார்கள். கிறிஸ்து காலத்துக்கு முந்தைய நாளில், உதய ஒளியைக் குறிக்கும் ஜெர்மன் தேவதையை, பூமியின் தாய்க் கடவுளாக, 'ஆஸ்டரா' என்று அழைத்து வந்தார்கள்; அதிலிருந்துதான் 'ஆஸ்டர்ன்' என்பது வந்திருக்கிறது. ''ஈஸ்டர் நீர்'' கொண்டு வருவது என்பதாக ஒரு சம்பிரதாயம் ஆதி நாளில் ஜெர்மன் கிராமங்களில் இருந்து வந்தது; சூரியன் உதிப்பதற்கு முன்பே இந்த நீரைக்கொண்டு வந்துவிட வேண்டும். பழைய மரபு ஒன்றின்படி, ஈஸ்டர் நன்னாளில், அதிகாலையில், இயற்கை யன்னை, உலகின் நதிகளிலும் ஊற்றுக்களிலும் உள்ள தண்ணீரை எடுத்து வருவோருக்கு அழகும், ஆரோக்கியமும், வற்றாத இளமையும் கிடைக்கும் என்றும் ஒரு நெடுங்கால நம்பிக்கை இருக்கிறது. ஈஸ்டர்

பண்டிகை தினத்தன்று காலையில் நீர் எடுத்துவருவதற்காக மக்கள் நடந்து சென்றது, வழி வழியாக வந்துள்ள ஈஸ்டர் நடை யாத்திரையின் துவக்கமாயிருக்கக்கூடும். பலருக்கு இன்னமும் இது புனித யாத்திரை போன்று இருந்து வருகிறது.

மேலும், ஜெர்மனியில் ஈஸ்டர் பண்டிகையின்போது பெரிய பெரிய சொக்கப்பனைகள் கொளுத்தித் தார் என்னும் பழைய ஜெர்மன் தேவதையைக் கௌரவிக்கிறார்கள். குளிர் காலத்தின் இருளை ஒளி வென்றுவிட்டதைக் கொண்டாடுவதாகவும் இந்தச் சடங்கு அமைகிறது. ஈஸ்டர் விருந்துக்கு நெடுநாளைக்கு முன்பே கிராமத்து இளைஞர்கள் இந்தச் சொக்கப்பனைகளுக்காக விறகும், வைக்கோலும், சுள்ளிகளும் திரட்ட ஆரம்பித்துவிடுவார்கள். ஈஸ்டருக்கு முந்தின இரவு, விருந்துக்குச் சற்று நேரம் இருக்கும் போது, திடீரென்று கிராமத்துச் சுற்றுப்புற மலைகளில் இருளைக் கிழித்துக் கொண்டு சொக்கப்பனைகளின் ஜ்வாலைகள் வெடித்தெழும்; ஈஸ்டர் ஜோதி எங்கும் பரவும். வடமேற்கு ஜெர்மனியில் உள்ள வெஸ்ஸர் மலைகளில், ஈஸ்டர் மாலையில், பெரிய பெரிய மரச் சக்கரங்களைச் சுற்றிலும் நிறைய வைக்கோலைக் கட்டி அதற்குத் தீ வைத்து, மலை மேலிருந்து உருண்டோடிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்.

ஜெர்மனியில் ஈஸ்டர் சம்பிரதாயங்களில், "ஈஸ்டர் முட்டை", "ஈஸ்டர் முயல்" ஆகிய சிறப்பம்சங்களும் உண்டு. சரித்திர காலத்துக்கும் முன்புகூட முட்டைகளை, புதுவாழ்வுபெறும் உயிரின் சின்னமாக மக்கள் கருதிவந்தார்கள். குளிர் காலத்து உறைபனி போன்று, முட்டையின் வெண்ணிற மேல் ஓடு, உள்ளிருக்கும் உயிரைப்பாதுகாத்து

நிற்கிறது; சூரியனின் கதகதப்பான ஒளிக் கதிர்கள் முட்டையின் மேலோட்டைப் பிளக்கும்போது உள்ளேயிருந்து சிசு வெளிவருகிறது. ஈஸ்டர் முட்டைகளை வர்ணப் பூச்சுக் கொடுத்து உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பரிசாகக் கொடுப்பதென்பது பழைய ஜெர்மன் வழக்கமாகும். வசந்த காலத்தில் சிவப்பு முட்டைகள் தார் என்னும் தேவதைக்கும், மஞ்சள் முட்டைகள் ஆஸ்டரா தேவதைக்கும் சமர்ப்பிக்கப்படுவதால், அதற்குத் தக்கபடி முட்டைகளில் வர்ணம் பூசி எல்லோருக்கும் அன்பளிப்பாக வழங்குவார்கள். ஈஸ்டர் முட்டைகளை முயல்களோடு அன்பளிப்பாக வழங்குவதென்பது ஒரு பழைய வழக்கம். பூமி அன்னையின் மேலிருந்து புரளும் அலங்கார ஆடையை, கீழேபடாமல் சுமந்து செல்லும் தெய்வீக முயல்களாக இவை கருதப்படுகின்றன. நிறைய விருத்தியாகும் முயல்கள் உயிர்த்துடிப்பின் சின்னமாகவும் கருதப்படுகின்றன. இதுதான் இந்தப் பழக்கத்திற்குக் காரணம். ஈஸ்டர் மரபுகளெல்லாம் ஜெர்மன் சமுதாயத்தில் ஆழ்ந்து ஊறிப்போனவை. மிகப் புராதனமான சம்பிரதாயங்களும், கிறித்துவ நம்பிக்கைகளும் ஒன்ருய்ப் பிணைந்து உருவாகியிருக்கும் அழகான வழக்கங்கள் இவை. இவையெல்லாம் சேர்ந்துதான் ஈஸ்டர் பண்டிகையை, அன்றுபோல் இன்றும், இளைஞர் முதலியோர் எல்லோருக்கும் ஆனந்தமளிக்கும் அற்புதப் பண்டிகையாக வைத்திருக்கின்றன.

# பாட்டில்களில் கப்பல்கள்

[திருமதி. சசிகலாதிரிவேதி]

''பாட்டில் கப்பல்கள்'' தயாரிப்பதென்பது வடக்கு ஜெர்மனியில் விரிவாகப் பரவியிருக்கும் ஒரு பொழுதுபோக்காகும். ஹாம்பர்க் பட்டணத்தில் இது சிறப்புத் தொழிலாகவே நடக்கிறது. நம் ஆவலைத் தூண்டிவிடும் அற்புதமான நினைவுப்பொருள்களாக இந்தப் ''பாட்டில் கப்பல்கள்'' விளங்குகின்றன. இதற்கு ஆதாரமான முதல் சம்பவம் 150 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது என்று நம்புகிறார்கள். அதாவது யாரோ ஒரு மாலுமி, பாய்மரக் கப்பல் ஒன்றில் வெறுமே உட்கார்ந்திருந்தபோது, சின்னஞ்சிறு கப்பல் ஒன்றை, பாய்மரம் முதலிய எல்லா உறுப்புக்களோடும் எப்படியோ ஒரு சாராயப் பாட்டிலுக்குள் சாமர்த்தியமாகப் புகுத்திவிட்டான்; பாட்டிலுக்குள் அந்தக் கப்பல் பாய்மரத்தோடு கம்பீரமாக நிலைகொண்டுவிட்டது. அன்று முதல் ''பாட்டில் கப்பல்கள்'' ஜெர்மனியிலிருந்து நினைவுப் பொருள்களாக எங்கெங்கெல்லாமோ பிரயாணம்செய்து கொண்டிருக்கின்றன; இளைஞர் முதியோர் என்ற பேதமின்றி எல்லோரும் விரும்பிச் சேகரிக்கும் அற்புதப் பொருளாக அது விளங்குகிறது.

துறைமுகப் பட்டணமான ஹாம்பர்க்கில், எல்ப் நதியில் துறைக்கு வந்து சேருங் கப்பல்கள் அனைத்தும் பார்வைக்குத் தெரியும்படியான கட்டிடம் ஒன்றில், முதிய மாலுமி ஒருவர் பாட்டில் கப்பல்கள் கட்டும் 'தளம்' ஒன்றை வைத்து நடத்துகிறார். பல ஆண்டுகள் அந்தத் துறைமுகத்திலிருந்து தாமே கப்பலோட்டிச் சென்ற பழுத்த மாலுமி அவர். உலகின் எல்லா மூலைமுடுக்குகளையும் நன்கு அறிந்த அவர், ''வின்ட் ஜம்மெர்ஸ்'' என்னும் கப்பல்களில் துணிச்சலான வாழ்க்கையில் வேட்கையுடன் பணியாற்றியவர்.

பெருமையும் அழகும் மிக்க இந்தக் கப்பல்களின்மேல் காதல்கொண்டு அவர் மாலுமியானுர். பயங்கரமான ஹார்ன் முனையை இரண்டு தடவை சுற்றி வந்தவர் அவர். மார்டின் மஸூர் என்னும் பெயர்கொண்ட அவர் இன்று மாலுமித்தொழிலிலிருந்து ஓய்வுபெற்றுப் பென்ஷன் வாங்கு கிருர். ஆனுல் கப்பல்களின் மேல் இருக்கும் பிரியம் காரண மாக அவர் இப்போது "பாட்டில் கப்பல்கள்" தயாரிக்கிருர். இது மிகவும் கஷ்டமான ஒரு கலே. சின்னஞ்சிறு கப்பல்கள் கட்டுவது என்பது ஓர் அபூர்வ ஆற்றல் தேவைப்படும் தொழில்; இதில் பயிற்சி முடிவுக்குவரும் நாளே கிடையாது என்று சொல்லலாம். கட்டை, துணி, கோந்து, ஏகப்பட்ட நூல் ஆகியவற்ருேடு, அசாதாரணப் பெறுமையும், விரல் களில் நுண்ணிய ஆற்றலும். மனத்தில் அழகான கற்பனே யும் இந்தக் கலேக்கு வேண்டும். ஒரு பாட்டிலேப் பார்த்த வுடன், அதற்குள் என்ன மாதிரிக்கு கப்பலேப் புகுத்த முடியும் என்பதை மனட் கற்பனே செய் துவிட வேண்டும்.

மார்டின் மஸூர் தமது கப்பல்களேப் பெரும்பாலும் நினேவைக் கொண்டும், புகைப்படங்களேக் கொண்டுமே அமைக்கிருர். 68 வயது நிறைந்த இந்தக் கலேஞர் மாதிரிப் படம் என்று எதுவும் வரைந்து கொள்ளாமலே இதைச் செய்கிருர் என்பது ஓர் அதிசயம். சிறு கப்பலின் உடல் சட்டத்தை அவர் கடினமான மரத்திலிருந்து செது க்கி எடுக்கிருர்; அந்த உடலின் எந்த உறுப்பும் பாட்டிலின் வாயை விடப் பெரியதாயிருக்கக்கூடாது. பாய்மரக் கம்பங் கள் கப்பலின் அடித்தளத்துடன் சின்னஞ் சிறு கீழ்கள் மூலம் இணேக்கப்படுகிறது.கப்பலே மெதுவாகப் பாட்டிலுக் குள் நுழைத்தவுடன், ஒரு நுண்ணிய நூலே இழுப்பதன் மூலம் கம்பம் உயர்ந்து நின்று கொள்கிறது; உடனே பாய்மரம் விரிந்து கம்பீரமாய் நிற்கிறது.

கப்பலை நுழைப்பதற்கு முன்னால், கடலோரப்பகுதி போன்றும், கொந்தளிக்கும் கடல் போன்றும் வரையப் பட்ட வண்ணப்படம் ஒன்று பாட்டிலுக்குள் வைக்கப்படு கிறது. அந்தப் படத்தில் நீலமும், பச்சையுமாகக் கடல் நீர் தீட்டப்பட்டிருக்கும்; அங்கங்கே மோதும் அலைகளின் வெண் நுரைகள் சுருண்டு விழுவது காட்டப்பட்டிருக்கும். கலைப் பொருள் தேடுவோரின் அன்பைப்பெற்று இந்தக் கப்பல்கள் தொலை தூர நாடுகளுக்கெல்லாம் யாத்திரை செல்லுகின் றன. எவ்வளவோ ஜாக்கிரதையுடனும், பேரார்வத்தோடும் தயாரிக்கப்படும் இந்தக் கப்பல்களை ஹாம்பர்க் பட்டணத் திலேயே இளைஞர் முதியோர் என்ற வேறுபாடின்றி எல் லோரும் வியந்து பாராட்டுகிறார்கள் என்றால் மற்றவர்களுக் குக் கேட்கவா வேண்டும்? அணுசக்தியால் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்கள் கடலுக்கடியில் நுழைந்து செல்லும் இந் நாளிலுங் கூட, பழைய பாய்மரக் கப்பல்களையும், துறை முகங்களையும், கடல் வாழ்க்கையையும் ஏக்கத்துடன் நினைத் துப் பார்த்துப் பூரிப்படையாதவர் யாரும் இருக்கமுடியாது. ஆகவே பாட்டில் கப்பல்களில் இவ்வளவு மோகம் இருப் பதில் வியப்பில்லை.

# வள்ளுவர் வழங்கும் மொழி நூல்

வித்துவான் வீ. ப. கா. சுந்தரம் M. A.
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

திருக்குறள் பலவாறு போற்றப்படுகிறது; அற நூல், நீதி நூல், காதல் நூல், பொருள் நூல் என்றெல்லாம் புகழப்படுகிறது. மொழிநூற் கருத்துக்கட்கும் திருக்குறள் பேராதரவு அளிக்கின்றது. வேர்ச் சொல் பொருள் காண்பதற்கும், ஒரு சொல் வட சொல்லா, தமிழ்ச் சொல்லா எனக் காண்பதற்கும் தூய குறள் மொழிகள் துணைபுரிகின்றன.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது தொல்காப்பியம். எனவே, ஆதி மாந்தர் ஒரு காரணம் பற்றியே ஒவ்வொரு சொல்லையும் அமைத்தனர். ஆனால் அக்காரணம் இப்போது நமக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. ஆதலால் "மொழிப் பொருள் காரணம் விழிப்பத்தோன்றா" என்றார் தொல்காப்பியர். ஆனாலும் இந்த நூற்றாண்டில் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களுக்கு வேர்ச் சொற்கள் கண்டறிந்து விளக்கியுள்ளனர் தமிழ்ப் பேரறிஞர். வள்ளுவர் வாய்மொழிகள் பல சொற்களுக்கு வேர்ச் சொற்கள் காணப் பெரிதும் உதவுகின்றன. சில எடுத்துக்காட்டுக்கள் காண்போம்:

**1. பகவன்:**

"ஆதி பகவன் முதற்றே உலகு" எனுங் குறள் வரிக்கண், ஆதி-பகவன்-உலகு என்ற மூன்று சொற்களும் வட சொற்கள் எனச் சொல்லிவருகின்றனர். பகவன் என்பது வட சொல் எனப் பரிமேலழகர் உரைத்தார்; "ஆதி பகவன்

எனும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநான் முடிபு'' என்று உரைத்தார்: ஆனால் அழியாக் குறளின் அழகு மொழிகள் பகவன் வடசொல்லன்று எனக் காட்டு கின்றன; இஃது எந்த வேர்ச் சொல்லினின்றும் பிறந் தது எனவும் காட்டுகின்றன.

பகு>பகவு>பகவன்

பகு என்பதன் பொருள் பிரிவு, பிளவு என்பது.

பகவு=பகு+வ்+அ+உ.

இதில் பகுஎன்பது பகுதி. வ்=உடம்படுமெய். அ=சாரியை உ=விகுதி. பகவு என்னும் சொல்லை வள்ளுவரே பிரிவு எனும் பொருளில், 889ஆவது குறளில் வழங்கியுள்ளார். ''எள் பகவு அன்ன சிறுமை'' என்ற குறள் வரிக்கு எள் பிரிவு போன்ற சிறுமை என்பது பொருள்.

மேலும் பகு என்னும் சொற்கு ஆணிவேர்ச் சொல் 'பக்' என்பதாம். பக்+உ=பகு. பக் எனும் ஆணிவேர்ச் சொல்லடியாகப் பல சொற்கள் பிறக்கின்றன. அவற்றை வள்ளுவர்தம் குறட்பாக்களில் பொருள் தோன்ற அமைத்துப் பயன்படுத்தியுள்ளனர்.

187 குறள்: பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்=பிரியுமாறு சொல்லி உறவினரைப் பிரிப்பர்.

852: பகல் எனும் பண்பு=பிரிக்கப்பட்ட பண்பு.

889: எள் பகவு அன்ன சிறுமை=எள் பிரிவு போன்ற சிறுமை.

322: பகுத்துண்டு=பிரித்துண்டு.

111: பகுதியால் பாற்பட்டு ஒழுக=பகை, நொதுமல், நட்பு எனும் பிரிவுதோறும் தன்முறையை விடாதொழுக.

146: பகை=பகு+ஐ; பிரிந்த தன்மை.

620ஆவது குறட்பாவிலேவரும் "பக்கம்" எனும் சொல்லானது பட்சம் எனும் ஆரியச் சொல்லினின்றும் பிறந்தது என்பர்; திருக்குறட் சொல்லடைவும் இவ்வாறே கூறும். ஆனல் இது 'பக்' எனும் வேர்ச் சொல்லினின்றும் பிறந்த தூய தமிழ்ச் சொல். பிரிவு என்பது அதன்பொருள். பாக்கம் (கோடம்பாக்கம்) என்பதும் அப்பொருள்படுவதே.

1068: பக்குவிடும்=பிளந்துபோகும்.

620; ஊழையும் உப்பக்கம் காண்ப=ஊழையும் பின்பகுதியில் காண்பர்.

எனவே, 'பக்' எனும் ஆணிவேர்ச் சொல்லடியாகப் பிறந்த சொற்கள் பக, பகவு, பகுதி, பகல், பகை, பகுத்து, பக்கு, பக்கம் முதலியன. 'பகு' முதல் நீண்டு பாகு ஆகும். பாகு=பாதி. கண் களவு காமத்திற் **செம்பாகம்** அன்று (1092) என்பதற்குக் கண்களவு காமத்திற் **சரிபாதி** அன்று என்பது பொருள்.

பக் எனும் வேர்ச் சொல்லினின்றே பகவன் எனும் தமிழ்ச் சொல் பிறந்துளது. பகவன் என்பதைப் பகு+வ்+அன் எனப் பகுக்கலாம். பகுத்து அருள்பவன் பகவன். ஆதியில் உலகெலாம் படைத்து, அவற்றைக் கல், பயிர், புள், விலங்கு, மாந்தர் என இனம் இனமாகப் பகுத்து, அவற்றிற்குத் தனித்தனித் தன்மைகள் அளித்துக் காப்பவன் பகவன். இப்பொருளிலே இறைவனை-"வகுத்தான் வகுத்த, வகையல்லால்" எனும் குறளில் (371) குறிக்கின்றார். 'உலகியற்றியான்' என்றும் குறிக்கின்றார். பகவன் தமிழ்ச் சொல்லேயாகும் என்பதை மொழிநூற் புலவர் தேவநேயரின் 'முதற்றாய் மொழி' எனும் நூலிலுங்கண்டு தெளிக.

**2. உலகு:**

'உலகு' என்ற சொல் 'லோகம்' என்ற சொல்லினின்றும் பிறந்தது எனத்தவறாக விளக்குவார்சிலர். உல என்பது வேர்ச் சொல்: அதற்கு உருண்டை என்பது பொருள். இவ் வேர்ச் சொல்லினின்றும் பிறக்கும் தமிழ்ச் சொற்கள் உலக்கை, உலம், உலண்டு முதலியனவாகும். ஆதியில் கற் பாறைக் குழியாகிய உரல்களில் உருண்டைக் கல்லையே உலக்கையாகப் பயன்படுத்தினர். சீவகன் ''உலங்கலந்த உயர்ந்த தோளான்'' எனத் திருத்தக்க தேவர் குறித்தனர் உருண்டைக் கல்லையொத்த தோளான் என்பது இதன் பொருள். உலண்டு என்பது உருண்டை வடிவான ஒரு வகைப் புழு. எனவே உருண்டை வடிவானது எனும் பொருளில் தோன்றியது உலகு என்னும் தமிழ்ச் சொல்,

**3. ஆதி:**

தொடக்கம், அடிப்படை எனப் பொருள்படுவது ஆதி. மறைத்திரு. ஞானப்பிரகாசர் வெளியிட்ட சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியில் ஆதி என்பது 'அடி' என்ற சொல்லினின்றும் பிறந்தது என்றும் இத்தமிழ்ச் சொல்லி னின்றே ஆதிஸ் என்ற வடசொல் பிறந்திருக்கலாம் என் றும் கூறியுள்ளார். ஆதி என்பதற்குத் தொடக்கம் என்பது பொருள். வள்ளுவர் இப்பொருள்பட இச்சொல்லைக் குறள் 543இல் பயன்படுத்தியுள்ளார்,

''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் **ஆதியாய்** நின்றது மன்னவன் கோல்'' எனுங் குறளில் 'அடிப்படையாய்'எனும் பொருள் தருவது 'ஆதியாய்' எனுஞ் சொல், 'ஆதல் ஆதி' என்று இன்று ஒருவர் ஆய்வுரைத்தது பொருள் பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. ஆதி பகவன் என்பதற்கு

மூலப்பொருளாகிய அல்லது அடிப்படையோனுகிய பகவன் எனப் பொருள்கொள்ளல் பொருத்தமாகவுள்ளது.

**4. அந்தணர்**

30ஆம் குறளில் அந்தணர் எனுஞ் சொற் பொருளை வள்ளுவப் பெருந்தகையே விளக்கியிருக்கின்றார். அம் = அழகிய, தணர் = தண்மையையுடையவர், அஃதாவது எவ்வுயிர்க்கும் இரங்குபவர், தண்மை என்பது இரக்கம் அந்தணர் என்போர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவர் என்று, சொற்பொருள் விளக்கமே அருளிச் சென்றுள்ளார் வள்ளுவர்.

**5. ஒப்புரவு**

ஒப்புரவு எனுஞ் சொல்லை ஒப்பு, உரவு எனப் பிரிக்கலாம். உரவு என்பது விகுதி. நல்குரவு, துப்புரவு எனுஞ் சொற்களில் உரவு என்பது விகுதி. அதுபோலவே ஒப்புரவிலும் ஒப்பு என்பது பகுதி. ஒப்புரவு என்பதன் பொருள், பொருந்தி வாழ்தலாகும். இனி ஒப்பு எனும் சொற்கும் மூல ஆணி வேர்ச் சொல் 'ஒ' என்பதாகும். 'ஒ' எனும் ஓரெழுத்து வேர்ச் சொல்லின் பொருள் ஒன்றுதல், பொருந்துதல், சேர்தல் என்பனவாம். ஒ எனும் வேர்ச் சொல்லினின்றும் பிறக்கும் பிற சொற்கள் இவை,

ஒ = ஒத்தி; ஒத்து—ஒத்திகை.

ஒ = ஒப்பம்; ஒப்பு; ஒப்பனை

ஒ = ஒக்க; ஒக்கல்; ஒக்கும்,

ஒப்புரவறிதல் எனும் அதிகாரத்தின் பொருள் ஒருவன் தன் செல்வத்தைப் பலர்க்கும் அளித்துதவிப் பொருந்தி வாழ்வதாகும். ஈகை, கொடை என்பன தனி மனிதனுக்கு, தனிச் செயலுக்கு அளிப்பதாகும். ஒப்புரவு என்பது பொது

மக்கட்கு, பொது அறச்செயலுக்குக் கொடுத்துதவுவதாகும். ஆலயம் கட்டல், பள்ளி நாட்டல், ஊருணி வெட்டல் போன்ற செயல்கள் ஒப்புரவுச் செயல்கள்; ஒத்ததறிவான் எனும் சொல் தன்னைப்போல் பிறனையும் நேசிப்பவன் எனப் பொருள்படுகின்றது. பொதுமக்கட்கு ஆற்றும் பேரறச் செயல் ஒப்புரவாகும் என்பதை வள்ளுவர் பல உவமைகளால் விளக்குகின்றார். ஊருணிபோல, உள்ளூர்ப் பழுமரம் போல, மருந்து மரம் போல ஒப்புரவாளன் செல்வம் பலர்க்கும் பயன்படுதல் வேண்டும் என்றுரைத்துள்ளார். இவ்வாறு உவமையாலும் சொல்லாலும் ஒப்புரவு எனுஞ் சொற்பொருள் விளக்கியுள்ளார். பரிமேலழகர் 'ஒப்புரவிற்குப் பொருள் உலக நடையினை அறிந்து செய்தல்' என்றார். இப்பொருள் வேர்ச்சொற் பொருளோடு பொருந்துவது அன்று; ஒப்புரவுக் குறட் கருத்துக்களோடும் பொருந்துவது அன்று.

ஓரெழுத்துச் சொல்லாகிய 'ஒ' என்பதனடியாகப் பிறந்த பல சொற்களைச் சொற்பொருள் தோன்ற வள்ளுவர் வழங்கியுள்ளார்.

490: ஒக்க = ஒ + க் + க. இதன் பொருள் ஒத்திருப்பதாக என்பது.

43: ஒக்கல் = ஒ + க் + கு + அல். இதன் பொருள் ஒத்திருப்பவர், அஃதாவது சுற்றத்தார் என்பது.

1100: ஒக்கின் = ஒ + க் + கு + இன். ஒத்திருக்குமானால் என்பது இதன் பொருள்.

1112: ஒக்கும் = ஒ + க் + கு + உம். அஃதாவது ஒத்திருக்கும்; போல இருக்கும்; நிகர்க்கும்.

702: ஒப்ப = ஒ + ப் + ப. நிகர்க்க என்பது பொருள்.

993: ஒப்பது = பொருந்துவது.

*1071:* ஒப்பாரி=ஒப்பு+ஆர்+இ. இதன் பொருள் நிகர்த்தல் என்பது.

## 6. ஒற்று

ஒற்று என்ற சொல்லும் ஒ எனும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்ததுவே. இதன் வேர்ப்பொருளை வள்ளுவரே விளக்கியுள்ளார். ஒற்றறிதல் என்பது ஒத்துப்பார்த்து உய்த்தறிந்து கொள்ளுதல் எனப் பொருள்படுவது. ஒத்துப் பார்த்தல் என்பது பொருந்திப் பார்த்தலாம்.

*558:* ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினுல் ஒற்றிக் கொளல்.

இக்குறளிலே ஒற்று எனுஞ் சொற் பொருளை வள்ளுவரே விளக்கியுள்ளமைகண்டு இன்புறற் பாலது. "ஒற்றினுல் ஒற்றிப் பொருள் தெரியா" (538) என்றும், "ஒற்ருெற் றுணராமை ஆள்க" (589) என்றும் விரிக்குந் தொடர்களால் ஒற்று எனுஞ் சொற்பொருளை விளக்குகின்ருர்.

## 7. அரசு.

அரசன், மன்னன், வேந்தன் எனுஞ் சொற்கள் தூய தமிழ்ச் சொற்கள். இவை தம்முள் பொருள் வேறுபாடுடையன,

வீர்>விரை, விரசு.
உர்>உரை, உராய், உரசு.
அர்>அரையன், அரசு.

எனவே விர் எனும் வேர்ச் சொல்லினின்றும் விரசும், உர் எனும் வேர்ச் சொல்லினின்றும் உரசும் பிறந்தது போல, அர் எனும் வேர்ச் சொல்லினின்றும் அரசு பிறந்தது. அர் எனும் வேர்ச் சொற்குச் சிவப்பு, செம்மை என்பது பொருள்.

அர் + அன் = அரன்; சிவந்த நிறமுடையவன் சிவன்; செந்நிவடிவினன்.

அர் + க் + கு = அரக்கு; சிவந்த ஒருவகை மெழுகு,

அர + த் + தம் = அரத்தம்; சிவந்த குருதி,

அரத்தம் தூய தமிழ்ச் சொல். பழம் இலக்கியச் சொல்*. இது ரத்தமாகிப் பின், இரத்தமாகியது வருத்தமாகவுள்ளது.

அர் + இ = அரி; செம்மை நிற நெருப்பு. அரி = அக்கினி தேவன்; சூரியன்.

அர் > அரையன் > அரைசன் > அரசன்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்து (283) அரைய மரம் என்பது அரச மரம் எனவாயிற்று என்பர். அரசன் என்பதற்கு வேர்ச்சொற் பொருள் செம்மைசெய்வோன் என்பது. சிறப்பு நிறம் செம்மையாகிய தன்மையைக் குறிக்கும். செந்தண்மை-செம்பொருள்-செங்கோல் என்ற சொற்களில் இப் பொருளைக் காணலாம். தீமை நீக்கிச் செம்மையான செயல்களைச் செய்வோனே அரசன் ஆவான். இச்சொற்பொருளானது வள்ளுவர்தங்குறளில் விளக்கம்பெற்றுள்ளது. அரசன் அருமைப்பாடுடைய பெரும் செம்மைச் செயல்களைச் செய்வோனுவான்.

385: இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

381: படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

---

* 'அரத்தப் பூம்பட்டு' என்ற சிலப்பதிகாரச் செம்மொழியினை நினைவு கூர்க.

**8. வேந்தன்**

வெய்-வேய் என்னும்வேர்ச்சொற்கள் வெப்பம்-கடுமை எனப் பொருள் குறிப்பன.

வெய் — வெயர் — வியர் — வியர்வை.

வெய்—வே—வேகு—வேகுதல்

வெய்—வெய்ம்மை—வெம்மை

வெ என்பது நீண்டு வே என்றாகும். வே—வேந்தன். வேந்தன் என்பது ஒறுத்தடக்குபவன் எனும் பொருள் தருவது.சில குறுநில மன்னர்களை ஒறுத்தடக்கித்தலைமைபூண்டு ஆள்பவனே வேந்தன். அடக்கிஒடுக்கி ஆள்பவனே வேந்தன். இப்பொருளில் வள்ளுவர், வேந்தன் எனும் சொல்லை ஆண்டுள்ளமை கண்டு இன்புறல் வேண்டும். மன்னர்மன்னன் = வேந்தன்.

குற்றங் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில் (549) என்றார்; கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் (550) என்றார். இக்குறட்களில் தீமையை நீக்கி அடக்கி ஆள்பவனே வேந்தன் எனும் மொழி நூல் கருத்துப்பட வழங்கியுள்ளார். வென்றடக்கும் வலியோனே வேந்தன் என்ற கருத்துப்படத் தொல்காப்பியரும் வேந்தன் என்னும் சொல்லைப் பல்வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

*1016:* மைந்து பொருளாக வந்த வேந்தன்.
*1008:* எஞ்சா மண் நசை வேந்தன்.
*1025;* நிகர்த்து மேல்வந்த வேந்தன்.
*1018:* பட்ட வேந்தனை அட்ட வேந்தன்.
*1006:* ஓடா உடல் வேந்து.
*1018:* வேன்மிகு தானை வேந்து.
*1128:* வேபாக்கு= வெய்துறல்-வெப்பமுறல்,

**9. மன்னன்**

இது மன் எனும் வேர்ச்சொல் வழிப் பிறந்தது. மன் = நிலைபெறு.

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி (556)

இக்குறள், மன்னன் எனும் சொல்லின் மூலச் சொல்லை நன்கு புலப்படுத்துகின்றது.

**10. இறைவன்**

இறுத்தல்—தங்குதல்.

இறு—இறை—இறைவன். எங்குந் தங்கியிருப்பவன் இறைவன். அரசன், தான் ஓரிடத்தில் தங்கியிருப்பினும் தன் ஆணையை எங்கும் நிலவச்செய்து நிலத்தைக் காப்பவன். எனவே அவனை இறைவன் எனல் பொருந்தும்.

''இறை காக்கும் வையக மெல்லாம்'' (547) என்ற தொடரில் இறைப் பொருள் வெளிப்படுகின்றது.

வேர்ச்சொல் தரும் பொருளில்தான் சொற்களை எங்கும் பயன்படுத்த வேண்டும் என்று கருதுதல் தவறு. மன்னன், இறைவன், வேந்தன் என்னும் சொற்களை, வேர்ச்சொற் பொருள் கருதாது எங்கும் பயன்படுத்தலாம். ஆனால் வள்ளுவப் பேரறிஞர், இடத்திற்கேற்ற சொற்களை அமைப்பதில் நிகரற்றவர். தக்க சொல் தருவதில் தமக்கிணையில்லாதவர். எதுகை மோனைக்காக எச்சொல்லையும் போட்டு எழுதிவிடமாட்டார். ஏற்ற விடத்தில் ஏற்றசொல் ஏற்ப அமைக்கும் மொழியறிஞருள் ஏறு இவர்.

**11, பரத்தை**

பர எனும் சொற்கு விரிந்து செல், பரவிச் செல், நீண்டு செல் என்பது பொருள். இதன் ஆணிவேர்ச் சொல் 'பர்' என்பது இச்சொல்லடியாகப் பிறக்கும் சொற்கள் சில வருமாறு:

பரப்பு, பரவை = கடல்; பரம்பு அடித்தல் = உழுத நிலத்தைப் பரவும்படி செய்தல். பரத்தை என்பவள் ஒருவனுக்கென இல்லாமல் பரந்துபட்ட வாழ்க்கையினள். வள்ளுவர் பரத்த எனுஞ் சொற்கு வேர்ப் பொருள் விளக்குவது போன்று கீழ்க்குறளில் அமைத்துள்ளது இன்புறத்தக்கது,

பெண்ணியலா ரெல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

இக்குறளிலே, பெண்ணியலா ரெல்லாரும் தம் கண்ணால் பொதுவாகக் கண்டு உண்பர், இவ்வாறு பொதுவாக வுண்ட பரத்தமையுடைய நின் மார்பைப் பொருந்தேன் என்று பரத்தமைப் பொருள் விளங்கப் பரத்த எனும் சொல் அமைந்துள்ளது.

*1062:* "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக வுலகியற்றி யான்". என்னும் குறளில், பரந்து என்பதற்குப் பலபக்கம் அலைந்து திரிந்து என்பது பொருள்.

பர்—பார்—பாரி—பாரித்தல்.

*851-*ஆவது குறளில் நோய் பாரிக்கும் எனக் கூறப்பட்டுளது; நோய் விரிந்து பெருகும் என்பது பொருள்.

*193:* குறளில் வந்துள்ள பயனில பாரித்து உரைக்கும் என்ற தொடர்க்குப் பயனில்லாதவற்றை விரித்துச் சொல்லும் என்பது பொருள்.

916: தங்கலம் பாரிப்பார் = தம்புகழைப் பரப்புவார். நலிந்தோர்க்கீந்து நாடெல்லாம் நற்புகழ் பரப்பியதால் வள்ளல் ஒருவருக்குப் பாரி எனப் பெயர் வாய்த்தது மிகப் பொருத்தமே. எனவே, பர் என்ற வேர்ச் சொல்லடியாகப் பிறந்தவைகளே பரப்பு, பரத்த, பரத்தை, பரவை பரம்பு, பாரி, பார், பார்வை, பாரித்தல் முதலிய சொற்கள்.

## 12. மணம்

திருமணம் என்ற சொற் பொருள் பற்றித் தவருன கருத்துக்கள் இன்றுவரை பல நூற்களில் எழுதப்பட்டுவருகின்றன. அவை வருமாறு: ''மணம் என்ற சொல் நறுநாற்றத்தைக் குறிக்கும். மலரானது வைநுனையாய், சிற்றரும்பாய், வீயாய் இருக்குங்கால் மணஞ்சிறப்பதில்லை. மலரும் நிலையில்தான் மணமிகுந்து விளங்குகிறது. காய்த்துக் கனிதர மணமிகுந்த மலர்ப் பருவமே சிறந்தது. அவ்வாறே மக்கள் வாழ்விலும் குழவியாய், இளைஞனுய், மூதாளனுய் இருக்கும் நிலை பெருஞ்சிறப்புடையதன்று. இல்லறஞ் சிறக்க மணம்புரியும் பருவமே சிறந்தது. திருமணத்தால் அன்பு மலரும்'' என்று வலிந்து இணைத்துக் கூறிவருகின்றனர். இந்த விளக்கத்தில் வாழ்க்கைப் பருவங்கட்கு மலரின் பல நிலைகளை உவமை கூறுவர். ''பூ மலரும் பருவம் திருமணப் பருவம்'' என்று கூறுவர். இஃது உவமையாகப் பொருத்திக் காட்டுவதேயன்றி மணம் என்ற சொல்வழிப் பொருளன்று.

மண் என்ற வேர்ச்சொல்லிலிருந்து மணம் பிறக்கிறது. மண் + அம் = மணம். மண் என்ற வேர்ச் சொற்குப் பல பொருள்கள் உண்டு.

(1) மண் = நல்ல நாற்றம்

(எ-டு) முல்லை மணமிகுந்தது; முல்லை மணக்கின்றது.

(2) மண் = கழுவு.

(எ-டு) வாள்மண்ணுமங்கலம்-புறப்பொருளில் ஒரு துறை. வாளை நீராட்டிக் கொண்டாடும் விழாவாகும் இது. மண்ணினன் = கழுவினன்.

(3) மண் = ஒப்பனை.

மண்ணிய கோலம் = புனைந்தகோலம்

(4) மண் = பொருந்து; இணை, கலந்துகொள்.

இப்பொருளின் அடிப்படையில்தான் திருமணம் எனும் சொல் பிறக்கின்றது.

### எடுத்துக்காட்டுக்கள்

மணத்தல் = கலத்தல் (புறநா. 118) அறையும் பொறையும் மணந்த தலைய.........சிறுகுளம் = பாறையும் சிறு குவடும் கூடியவாகிய சிறு குளம்.

மணத்தல் = வந்துகூடுதல் (சீவகசிங். கோவிந்த. 2: 418) நிரை மணந்த காலையே = பசுநிரை வந்துகூடின அளவிலே.

மணத்தல் = நேர்தல், ஒன்று சேர நேரிடுதல் (கலித். 46) மருவுற மணந்த நட்பு.

மணத்தல் = பொருந்துதல் (சீவக. 2211) மத்தகத் தருவியின் மணந்த வோடைய = அருவிபோல மத்தகத்தில் பொருந்திய ஓடையுடையன.

மணத்தல் = புணர்தல் (கலித் 24) மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சி = மாசில்லாத வண்மையுடைய புணர்ந்த புணர்ச்சி.

இனி, வள்ளுவர் மணம் எனும் சொற்பொருள் விளக்குவது மிக இனிமையாகவும் சிறப்பாகவும் அமைந்துளது. (குறள் 1221) ஏ! மாலை நேரமே, இப்பொழுது நீ முன்னுளில்வந்த இன்பமான மாலைப்பொழுது அல்லை; முன்னுளில் கூடியிருந்தவர் (மணந்தார்) இப்பொழுது பிரிந்தார். எனவே நீ முன்னுள் கூடியிருந்த (மணந்த)மகளிர் உயிரை உண்ணும் சாவுக்காலமானுய்.

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலை நீ வாழிபொழுது.

எனவே, திருமணம் என்னுந் தொடருக்குப் பூவின் மலரும் பருவத்தை இணைத்துப் பொருள் கொள்வது பொருந்தாது. அது சொற்பொருளாகாது. திரு என்பது அடைமொழி. கண்டாரால் விரும்பப்பெறும் தன்மை என்பது அதன் பொருள். மணம் என்பதற்கு வேர்ச்சொற்பொருள் இணைவது, பொருந்துவது, கூடுவது என்பனவாகும். ஆங்கிலத்திலும் Wedding எனுஞ் சொற்கு ஒன்று சேருதல் என்ற பொருள் உள்ளது. இஃது ஒப்பு நோக்கி மகிழற்குரியது.

எனவே ஏற்ற விடத்தில் ஏற்றசொற்களை அமைக்கும் ஆற்றல் சான்றவர் வள்ளுவர் என்பதை மேற்காட்டிய சொற்கள் மூலம் கண்டோம். வேர்ச் சொற்பொருளை வெளிப்படுத்துவது போன்று சில வள்ளுவச் சொற்றொடர்கள் அமைந்துள்ளமை கண்டு கண்டு இன்புறத் தக்கன.

# பொருளியல்

[பண்டித. முத்துசாமிப்புலவர்,
தலைமைத் தமிழாசிரியர்
தூயமரியன்னை உயர்நிலைப்பள்ளி, மதுரை]

1 அறமும் பொருளும் இன்பமுமென் றறையும் உறுதிப் பொருண் மூன்றில்
திறமாம் பொருளைப் பெற்றவர்கள் சேர்வர்; மற்றை யிரண்டினையும்.
திறமாம் பொருளைப் பெறுதவர்வெந் தீவாய்ப் பெய்து வருத்துதல் போல்
அறவே துன்பம் பெறுவதலால் அணுவும் இன்பம் அடையாரே.

2 தைத்த கந்தைத் துணியணிந்து தாழ்ந்த நிலையில் வாழ்ந்தாலும்
மெத்தப் பொருள்வைத் திருப்பவரே மேலோ ராக விளங்கிடுவார்;
ஒத்த குடியிற் பிறந்தாலும் உயர்ந்த பண்பு படைத்தாலும்
செத்தபிணத்திற் கடையாவார் சிறிதும் பொருளைப் பெறுதாரே.

2 கல்லா தவனு யிருந்தாலும் கையில் நிரம்பப் பொருளிருந்தால்
எல்லா ருஞ்சென் றெதிர்கொள்வர்; எசமான் என்றே அழைத்திடுவார்;
இல்லா தவனை மனைவேண் டாள்; ஈன்ற தாயும் புறக்கணிப்பாள்;
செல்லா தவன்வாய்ச் சொல்; இதனைத் தேர்ந்து தெளிவீர் உலகீரே!

4 வளமார் பொருளைப் பெற்றுலகில் வாழுங்காலை முறைசொல்லி
அளவில் லாதார் கூடியுண வருந்திச் செல்வர்; வறுமையினில்
தளருங் காலை யுறவினரும் தலைகாட் டாமல் மறைந்திடுவார்;
உளமார் நட்புக் கொண்டவரும் உதவா தோடி யொளிவாரே.

5 உள்ளே யிருக்கும் நறுநெய்தமக் குரிமை யாகா தென்றாலும்
வெள்ளம் போல எறும்பினங்கள் விரைந்து சுற்றிப் புறம்போகா;
எள்ளத் தனையும் பிறர்க்கியார் என்று தெரிந்தும் பெருள்கருதிக்
கொள்ளை விருப்பாற் கைகட்டிக் கூடத்திரிவர் உலகத்தார்.

6 குடியன்; வெறியன்; குணக்கேடன்: கொலைசெய் வதிலே கைதேர்ந்த
கொடிய னாகவிருந்தாலும் குறையாப் பொருள்பெற் றிருப்பானேல்
படிமீ தவன்கைப் பொருளதனைப் பறிக்கக் கருதிப் பலபேர்கள்
அடியேன் வணக்கம் என்றுசொலி யவனைக் காக்கை பிடிப்பாரே.

7 இருளைப் போக்கும் கதிரவன்போல் எங்கும் அறியப் பட்டாலும்
மருளைப் போக்கும் கல்வியினில் வரம்பில் கடல்போன் றிருந்தாலும்
தெருளும் புலமைத் திறத்தினிலே சிறந்து விளங்கி யிருந்தாலும்
பொருளைப் பெறாரை உலகத்தார் போற்றார் போற்றார் போற்றாரே!

8 செல்வர் செய்யும் செயலெல்லாம் தேவன் செய்யும் செயலாகும்
செல்வர் சொல்லும் சொல்லெல்லாம் தெய்வத் திருமா மறையாகும்
செல்வர் கருதும் கருத்தெல்லாம் திருவுள் ளத்தின் கருத்தாகும்
செல்வம் பெற்றார் பெருமையெலாம் செப்பல் எளிதோ செகத்திரே!

9 பொருளே அறிவாம் கல்வியுமாம்; பொருளே அறத்தின் வித்தாகும்;
பொருளே இன்பச் சுரங்கமுமாம்; பொருளே புகழின் பிறப்பிடமாம்;
பொருளே பகைவர் செருக்கறுக்கும் புத்தம் புதிய கருவியுமாம்;
பொருளே யாவும் செயவல்ல கடவுள் என்று புகல்வாரே.

10 அருளைப் பெருதார்க் கவ்வுலகம் இல்லை; அதுபோல் அளவிறந்த
பொருளைப் பெருதார்க் கிவ்வுலகம் இல்லை யென்று புகன்றிடும்நம்
கருணைக் கடலாம் வள்ளுவர்சொல் கருத்தி லிருத்தி நல்வழியிற்
பொருளைத் திரட்டி யறஞ்செய்து புகழ்பெற் றுய்மின் புவியீரே!

11 பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருளென்-றருளுருவாம்
வள்ளுவனர் நன்கு வகுத்துரைத்த வாய்மொழியைக்
கொள்ளுக வாழ்வு குறித்து.

12 இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரைப்
பல்லாரும் போற்றிப் பணிவரென்று-நல்லவராம்
வள்ளுவர் கூறியது வாய்மையின்பாற் பட்டதே
எள்ளளவும் ஐயமிலை யே.

---

இவை மதுரைத் திருவள்ளுவர் கழகச்சார்பில் நடைபெற்ற கவிய ரங்கில் அரங்கேறியவை.

# அறவியல்

புலவர்மணி, வித்துவான் தி. கி. சுந்தரமூர்த்தி
(தலைமைத் தமிழாசிரியர்)
(தியாகராசர் நன்முறை உயர்நிலைப்பள்ளி, மதுரை-9)

## வணக்கம்

1. அறக்கடலே! அன்புருவே! அகரமுத லெழுத்தாகி அமைந்த ஒன்றே!
நிறைபொருளே! வாலறிவே! நீளிருள்சேர் வினைசேரா நிகரி லாத
இறையவனே! உயிர்த்துணையே! எண்குணமே! யாவை யுமா யிலங்கி உள்ளே
உறைகின்ற மெய்ப்பொருளே! உன்னிருதாள் போற்றியருள் உலகநல முறவே.

## அவையடக்கம்

2. பண்: கொல்லிக்கௌவாணம்

கலைமலிந்த தமிழ்மொழியாம் கடலில்தோய்ந் தெழுந்து
கருதரிய திருக்குறளை காசினிக்கே ஈந்த
தலைவர்திரு வள்ளுவர்தம் கழகமதில் இன்று
கலைமகளார் திருவிழாவில் கவியரங்கில் தலைமை
அலைவறவே ஏற்றுள்ளீரும் அரும்பணிசெய் தலைவ!
அன்பார்ந்த தாய்குலமே! அருந்தமிழ்தேர் பெரியீர்!
நிலையுறவே கவிபொழியும் நிகரில்சீர் புலவீர்!
நேர்மையறம் வாழ்கவிதை நிலைத்திடவென் வணக்கம்.

### அறநூல்

3 பன்னாட்டில் உள்ளவரும் உணராத பலவறங்கள் பான்மை
யோடு
இந்நாட்டுத் தமிழ்ப்புலவர் இனிதளித்தார் தம்மொழியில்
இணையி லாத
அந்நூலுள் தலைமையுறு, 'அற'மென்றே பெயருற்ற அரிய
நீதிச்
செந்நூலாம் குறள்நெறியே யறம்புரிவார் பொன்றாது
திகழ்வரன்றே!

### அறமும் அறமுடையாரும்

4. வள்ளுவனார் வகுத்தளித்த வளரறங்க ளிரண்டினிலே
வாழ்தற் கேற்றுக்
கொள்ளுவதற் கில்லறந்தான் சிறந்ததெனத் தெளிந்தஉயர்
கொள்கையுள்ளோர்
விள்ளரிய உளத்திலுறை மாசுடனே பொய்யெல்லாம்
வீட்டி நின்றார்
தள்ளரிய அறமுடையார் வாழ்தலினால் இவ்வுலகம் தங்கிற்
றன்றே!

### அறமிழந்தார் மறவாழ்வு

5. அறம்என்பார் அவையேறி அளந்திடுவார்
வெறுங்கதைகள் அந்தோ வாழ்வில்
திறமாக அணுவளவும் தவிடுமியும் பிறர்க்கீய
சிந்தை நோவார்
தரமான செல்வத்தின் பயனறியார் தாரணியில்
இன்பங் காணார்
மறவாழ்வு வாழ்கின்ற மக்களெலாம் சுமையன்றோ
மண்ணுக் கேதான்.

## அறம்புரியார் வாழ்வு வீண்

6. பட்டங்கள் பெற்றிருப்பார் பலசெல்வ முற்றிருப்பார்
பதவியேற்றுச்
சட்டங்கள் செய்திருப்பார் சால்புரைகள் தேனெனவே
சாற்றி நிற்பார்
திட்டங்கள் போட்டிருப்பார் தெய்வத்தைச் சிந்திப்பார்
திகழ் உலகின்
வட்டத்தின் மையமதாய் வளர்ஈதல் அறமறியார் வாழ்க்கை
வீணே

## நிலையாமை உணர்ந்து அறம்புரிக

7. நில்லாது பொருளுலகின் நில்லாது யாக்கையிவை
நிலையென்றெண்ணி
ஒல்லாத தீவினைசெய் துழலாதீர்! அறஞ்செய்மின்! உலகீர்
நன்றே!
சொல்லாலும் செயலாலும் உளத்தாலும் செல்லுமிடத்
தென்று மெங்கும்
ஒல்லும்வகை அறம்புரிக! உண்மையொடு வாழ்ந்திடுக!
உயர்வீர் நன்றே!

## அற எழுச்சி

### (எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

8. நல்லது கண்டுமற் றல்லது பற்றும்
நாணறு மாக்கள்வாழ் நாநிலம் முற்றும்
எல்லையிலா மறம் எங்கணும் சூழ்ந்து
இன்னலி யற்றிடும் இயல்பினை ஓர்ந்து
சொல்லவோ வாயிலை, சூழறம் இல்லை,
சோர்ந்திடும் காலமோ; தூயநல் லுள்ளம்

இல்லையே; இனியிந்த எழிலறம் எங்கும்
எழுந்து விளங்கிட இன்புறு வோமே!

## கால அறமும் கடவுள் காப்பும்

9. அறமில்லை பொருளில்லை இன்ப மில்லை
அரியதமிழ் வழிவந்த இனம்நா மென்னும்
திறமான கருத்தில்லை தொன்மை வாய்ந்த
செழுந்தமிழ்நம் மொழியென்னும் சிந்தை யில்லை
கறங்கெனவே சுழல்கின்ற ஞாலந் தன்னில்
காலத்தால் முன்தோன்றிக் காத்த நூலாம்
அறநூல்கள் பயில்கின்ற ஆண்மை யில்லை,
ஆண்டவனே! செந்தமிழை அருளால் காப்பீர்!

## அறத்தை முன்வைத்த காரணம்

10. அறநெறியே பொருள்தேடி இன்பந்துய்க்க
ஆன்றோர்கள் ஆராய்ந்தே அறத்தை முன்னே
திறமுறவே வைத்தமைத்தார் செய்கை ஓரா
சிறுமதியர் பலரிந்நாள் சிறிய வாழ்வில்
அறனீக்கி அல்லவற்றை அருமை யாக
அணிஅணியாய்ச் செய்கின்ற அவலம் காணின்
மறமின்று பொருளாலும் இன்பத் தாலும்
மாநிலத்தில் ஆட்சிசெயும், மதியால் ஓர்க!

## வாணிகர் அறம்

11. மாட்சிபெறு வாணிகரின் நாட்டில் வாழ்ந்து
மாண்பொருள்கள் பலவற்றை மலிவாய் ஈந்த
காட்சியெலாம் இலக்கியத்தில் காணு கின்றோம்

கடைப்பொருள்கள் இந்நாளில் கலப்பே மிக்கு
ஆட்சிசெயக் காணுங்கால் அறமே வற்றி
அருளற்ற சிலகடையராலே நாடு
வீழ்ச்சிபெறு மோஎன்ற ஐயம்; நாட்டின்
விதிவணிக ரறச்செயலால் விளங்கவேண்டும்.

## அறவாழ்வு செழிக்க

12- உலகுயிர் எல்லாம் வாழ்ந்திடவே ஈகையறம் உயர வேண்டும்
கலகமெலாம் தீர்ந்துழவர் தொழிலோங்கக் காலத்தில் உதவ வேண்டும்
பலதொழிலும் அறத்துடனே பாரெல்லாம் பரவிபுகழ் ஓங்க வேண்டும்
சிலகற்ருர் பலகற்கும் செந்தமிழின் அறவாழ்வு செழிக்க வேண்டும்.

## வாழ்க

மறமே மிகுந்த இவ்வுலகில் மாண்பாய் வாழ நினைப்பீரேல்
அறமே செய்து நன்மையெலாம் அடைந்து நீடுவாழ்வீரே!

---

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற கவியரங்கில் அரங்கேறியவை.

உயர்திரு நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோ. பாரதியார் அவர்கள் இல்லத்திலிருந்த நூல்களை அவர்தம் குடும்பத்தினர் நம் சங்கத்திற்கு நன்கொடை தந்துள்ளனர்.

அந்நூல்களின் பட்டியல் பின் வருமாறு:—

1 சர்வஞான போதினி
2 ஸ்ரீ பரமஹம்சர் லீலை
3 பாடுதுறை
4 ஞானசம்பந்தர் திருப்பள்ளியெழுச்சி
5 திருவரங்கச்சிலேடை மாலை
6 மாசிலாமணி மாலை
7 குசேல வெண்பா
8 திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
9 மாட்டுவைத்திய போதினி
10 திருவாசகம்
11 தேவாரப் பதிகங்கள்
12 இரசவாத சிட்கா
13 வருக்கக் குறள்
14 திருவாசகம், திருவெம்பாவை கதிர்மணி விளக்கம்
15 சிவஞானபோத விஞவிடை
16 நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
17 அகலிகை வெண்பா
18 திருப்புகழ்
19 பெருமபாணாற்றுப்படை ஆராய்ச்சி உரை
20 சேந்தன் திவாகரம்
21 சிறு பிரபந்தங்கள்
22 சர்வஞானோத்தர ஆகமம்
23 திருக்காளுயிற் புராணம்
24 ஸ்ரீகிருஷ்ணசரித்திர விமர்சம்
25 திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்
26 ஸ்மிருதி விளக்கம்
27 பொருட்டொகை நிகண்டு
28 சிறுபாணாற்றுப்படை
29 திருக்காளத்திப் புராணம்
30 சூடாமணி நிகண்டு
31 அளகை அஷ்டப்பிரபந்தம்
32 மிளகாய்ச் சாமிகள் புராணம்
33 முத்திரா ராக்ஷசம்
34 குத்தாலம் ஓங்காரேச்சுரம் உடையார் கோயில் வரலாறு
35 தனிப்பா மஞ்சரி
36 வளைசையந்தாதியும் கலியாணியம்மை பிள்ளைத் தமிழும்
37 பரமார்த்த குருவின் கதை
38 அங்கயற்கண்ணி யருட்பா மாலை
39 தடாதகை திருமண வெண்பாமாலை
40 சூடாமணி நிகண்டு
41 அகராதி நிகண்டு
42 பண்டைத் தமிழர் பண்பாடு
43 நான் கண்டதும் கேட்டதும்
44 தனிப்பாசுரத் தொகை
45 கள்ளும் கவிதையும்
46 முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும்
47 பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ்
48 இந்தியச் சிற்பங்கள்
49 தமிழன் எப்படிக் கெட்டான்?
50 தமிழர் இலக்கியம்
51 விஞ்ஞான அறிவு வளர்ச்சி
52 உடற்பயிற்சி விளக்கம்
53 தொண்டைமான் முத்தையா நினைவு மலர்

54 உலக அறிவியல் நூல்
55 பாரதி வாழ்வு
56 ருஷிய புரட்சி
57 சத்தியசோதனை
58 சிந்தனைக் களஞ்சியம்
59 இளவேனில்
60 கட்டுரைக் கொத்து
61 அனுமான் இராமதூதன்
62 புதுமைப் பாக்கள்
63 நெடுநல்வாடை
64 கால்டுவெல் ஐயர்
65 முதற்குலோத்துங்க சோழன்
66 தமிழ் மொழி வரலாறு
67 சிந்தாமணி
68 புதுமைக் குறள்
69 திருஞான சம்பந்தர்
70 சிறு பிரபந்த வகைகள்
71 திரு. வி. க.
72 பேரம்பலப் புலவர் நினைவு மலர்
73 அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி
74 கொடைமன்னர் பனுவல்
75 திருவருட்பா ஆராய்ச்சி
76 தமிழ் நாவலர் சரிதை
77 தமிழர் வீரம்
78 கி. பி. 2000
79 திருக்குறள் கட்டுரைகள்
80 ராமாபாய் ரானடே
81 கட்டுரைகள்—மாதர்
82 " —சமூகம்
83 பாரதி நூல்கள்-பகுதி 3
84 பண்டிதமணியின் 60வது ஆண்டு நிறைவுவிழா
85 பண்டிதமணி உருவப்படத் திறப்புவிழா
86 கால்டுவெல் ஐயர் சரிதம்
87 நல்லுரைக்கோவை-1ம் பாகம்
88 கம்பர் காலவாராய்ச்சி
89 கம்பரும் இயற்கை நலமும் கவிதையும்
90 தமிழ் இசை மலர்-5
91 தமிழ் இசை மலர்-4
92 பாரதியின் வரலாறும்
93 தமிழிசையின் தொன்மை
94 புனித வாழ்வு
95 சேரர் தாயமுறை
96 கருத்தும் எழுத்தும்
97 தமிழ் அன்பர் மாநாடு-அறிக்கை
98 விசுவநாதம்-நாடகம்
99 சொல்லும் பொருளும்
100 வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்
101 அண்ணாமலைச் செட்டியார் சரிதம்
102 தமிழ்த் தொண்டர்கள்
103 பாலைக்கலி
104 மாலைப்பாக்கள்
105 மனிதனும் கடமைகளும்
106 தமிழ் உரைநடை வரலாறு
107 மறைமலையடிகள்
108 மனங்கவர் மதுரை
109 மனைவியின் உரிமை
110 அறிவுக்கு உணவு
111 தமிழர் யார் முதலிய கட்டுரைகள்
112 இஸ்லாத்தின் திரு நபி
113 பகுத்தறிவே விடுதலை
114 புனிதவதி அல்லது தமிழர் விடுதலைப் போர்
115 நாடகமேடை அனுபவங்கள்
116 மணிமொழிகள்
117 வடக்கெல்லையும் சென்னைப்பட்டினமும்
118 சிதம்பரனார் சீர்திருத்தப் பாடல்கள்
119 எழில்
120 காவிரிக் காவலர்
121 ரசிகமணியின் வாலி
122 தமிழ்நாட்டு வடவெல்லை
123 தமிழன் கண்ட மலேயா
124 இசைத் தமிழ்
125 எழிலோவியம்
126 திருக்குறள் வந்த வரலாறு
127 ஜீவநாகரத்தினம்

128 போரும் மக்கள் வரலாறும்
129 வீரசைவப் பிரமாணம்
130 தமிழ் எழுத்தொலி நூல்
131 நவயுகச் சிற்பிகள்
132 நல்லுரைக் கோவை 2-ம் பாகம்
133 மங்கலக்குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி
134 செட்டிநாடும் தமிழும்
135 நாணயம்
136 சிலப்பதிகார இசை நுணுக்க விளக்கம்
137 சுவாமி வேதாசலம்
138 தாவாரம் இல்லை
139 உ. வே. சா. சதாபிசேக வரலாறு
140 அடியார்க்குநல்லார் ஆராய்ச்சி
141 கம்பராமாயண சாரம் -பாலகாண்டம்
142 மறைந்த மாநகர்
143 பழமொழி மூலமும் உரையும்
144 பதிற்றுப்பத்து
145 ஐந்திணையைம்பது
146 சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்
147 சந்திரிகையின் கதை
148 அறநூல்
149 திருவாமாத்தூர் திரிபந்தாதி
150 வேதநெறி
151 உதிர்ந்த மலர்கள்
152 ஆசியச்சுடர்-3, 4
153 ஷை -6
154 ஷை -7
155 ஷை -5
156 பூச்செயன் காதல்
157 திருவானைக்கா அந்தாதி
158 கர்ம வீரன் கணபதி
159 நிரோட்டயமகவந்தாதி
160 நாலாயிரம்
161 விக்கிரமாதித்தன் சரித்திரம்
162 ஒற்றைக்கடை அந்தாதி முதலியன
163 அகலிகை வெண்பா
164 அங்கயற்கண்ணி கொச்சக் கலிப்பா முதலியன
165 ஆண்டியப்ப பிள்ளை பிள்ளைத் தமிழ்
166 கிருஷ்ணபிள்ளை சரித்திரம்
167 சிவகாருண்ய கீதங்கள்
168 திவ்விய தேசப் பாமாலை
169 ஞானசம்பந்தர் நான்மணி மாலை
170 பர்த்துருகரியார் சரித்திரம்
171 ஆசார்ய இருதயம்
172 குசேல சரிதம்
173 மத்தவிலாசப் பிரகசனம்
174 மனுநீதி காதல்
175 கந்தரனுபூதி
176 உதயணன் சரித்திரம்
177 இந்து பாகசாஸ்திரம்
178 பாரத வெண்பா
179 பாஞ்சாலி சபதம்
180 கற்பக விநாயகர் சதகம்
181 புதுமைக் குறள்
182 நான்மணிமாலையும் பதிகமும்
183 அறமறிந்தியற்றல்
184 சங்கநூற் புலவர் பெயரகராதி
185 நரி விருத்தம்
186 பதிகபஞ்சகம்
187 தில்லைத் திருவாசகப் பதிகங்கள்
188 வள்ளி வேட்கை
189 தில்லைவளாகப் பதிற்றுப் பத்தந்தாதி
190 துகில்விடு தூது
191 மேகமாலை
192 தேவையுலா
193 மெய்ஞ்ஞான வெண்பா
194 முக்கண்ஞான சக்கரவ தாரம்
195 பதினோராவது நிகண்டு
196 பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி


[தொடரும்]

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

### I. சங்க வெளியீடு

| | | | ரு. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

---

### II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினு விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 49. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 50. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 51. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 52. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 53. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 54. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 55. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 56. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 57. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 58. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 59. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 60. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 61. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 63. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 64. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 65. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 66. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |
| 67. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.